இளங்காரிகுடி

# மெய்ம்மொழித்தேவர்

அருளிய

# மெய்ம்மொழிச் சரிதை

பதிப்பாசிரியர் :
**மு. சண்முகம் பிள்ளை**
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

[தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு'
ஐந்தாம் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது]

**சென்னைப் பல்கலைக் கழகம்**
**1977**

அச்சில் வாரா அருந்தமிழ்—6

இளங்காரிகுடி

## மெய்ம்மொழித்தேவர்

அருளிய

# மெய்ம்மொழிச் சரிதை

பதிப்பாசிரியர் :

**மு. சண்முகம் பிள்ளை**

தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

1977

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1977.

## இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள்

1. அப்பாண்டைநாதர் உலா

   —தமிழாய்வு I, 1972

2. நாககுமார காவியம்

   —தமிழாய்வு II, 1973

3. திருமேற்றிசை அந்தாதி

   —அப்பாண்டைநாதர் உலா தனிநூலின் பிற்சேர்க்கை 1974

4. ஈனமுத்துப் பாண்டியன் கதை

   —தமிழாய்வு III, 1974

5. அடிமதிக்குடி அய்யனூர் பிள்ளைத்தமிழ்

   —தமிழாய்வு IV, 1975

# முகவுரை

'மெய்ம்மொழிச் சரிதை' என்னும் சைவ சாத்திர நூல் 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தத்துவராயரின் கவனத்தை மிகவும் கவர்ந்த தொரு நூலாகும். தத்துவராயர் தமது பரமாசாரியர் சிவப்பிரகாசரின் பெயரால் திரட்டியருளிய வேதாந்தத் தொகைநூலான 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் இந்நூலிலிருந்தும் பல பாடல்களைத் தெரிந்தெடுத் துள்ளார். மெய்ம்மொழிச் சரிதை-சுபக்கம் 361 பாடல்களில் 109 பாடல்கள் தத்துவராயரால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பரபக்கம் 124 பாடல்களுள் இப்பொழுது கிட்டியுள்ள 42 பாடல்களில் 14 பாடல் கள் பெருந்திரட்டிலும் காணப்படுகின்றன. இந்தக் கணக்கை உற்று நோக்கினுல் மெய்ம்மொழிச் சரிதையிலுள்ள மொத்தப்பாடல் களுள் ஏறத்தாழ மூன்றிலொருபங்குப் பாடல்கள் பெருந்திரட்டில் இடம் பெற்றுள்ளன என்பது தெரியவரும்.

பெருந்திரட்டில் இந்நூலின் பெயர் "மெய்ம்மொழிச் சரிதை' என்றும், 'மெய்ம்மொழி' என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்நூற்பெயர் சுருக்கமாக 'மெய்ம்மொழி' என்றும் வழங்கப்பட்டு வந்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம்.

மெய் என்பது உண்மை என்னும் பொருள் தருதலேயன்றி மெய் யான உண்மைகளை விளக்குகின்ற நூல் என்னும் பொருளையும் தரும்.

> 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற' (குறள். 300)

என்னும் குறளில், 'மெய்யாக் கண்டவற்றுள்' என்பதற்கு, 'மெய்ந் நூல்களாகக் கண்டவற்றுள்' எனப் பரிமேலழகர் உரைவகுக்கின்ருர். மணிமேகலையில்,

> 'மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
> இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
> சமயக் கணக்கரும்' (மணி. 1 : 11-13)

எனச் சீத்தலைச்சாத்தனுர் சமயக்கணக்கர்பற்றிக் கூறுமிடத்து அவர், மெய்த்திறம், வழக்கு, நன்பொருள், வீடு என்னும் நான்கிலும் நல்ல பயிற்சியுடையராயிருப்பர் என்று கூறுகிருர். இங்கே, 'மெய்த்திறம்' என்பது மெய்ம்மையை உணர்த்துவனவாகிய நூல்களையேயாகும். சமயக்கணக்கர்தந்திறங் கேட்ட காதையிலும்,

'மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற
எத்திறத் தினுமிசை யாதிவர் உரை' (மணி 27 : 106–107)

என்று சாத்தனுர் பேசுகின்ருர். இவற்ருல் சமய உண்மைகளைத் உணர்த்தும் நூலையே 'மெய்த்திறம்' எனக் குறிக்கின்ருர் என்பது தெளிவு.

மெய்த்திறம் என்னும் பண்டைய வழக்குப் போலவே 'மெய்ம் மொழி' என்பதும் சமய உண்மைகளை உணர்த்தும் நூலைக் குறிக் கிறது. மெய்ம்மொழிச் சரிதை யென்ருல் உண்மைப் பொருள் வர லாறு என்ரும். இந்த மெய்ம்மொழிச் சரிதை நூலும் சிவஞானசித்தி யாரைப் போன்று பரபக்கம், சுபக்கம் என்னும் இருகூருயமைந்த தொரு சைவ சாத்திரநூலாகும்.

இந்த நூலின் நடை சித்தாந்த சாத்திரங்களைப் போன்ற சிறப் பான நடையாகக் காணப்படவில்லை. இலக்கிய வரலாற்றுப் பேரறி ஞர் திரு.மு. அருணுசலம் அவர்கள், தமது பதினன்காம் நூற்ருண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் இந்நூல்பற்றி உரைக்குமிடத்து, 'நூலில் பயிலும் சமயச் சொற்கள் சித்தாந்த மரபுக்குரியனவல்ல. வேதாந்த மரபுக்குரிய சொற்களும் இந்நூலில் நிரம்பக் காணப்படுகின்றன. எனவே, இந்நூலாசிரியர் ஓரளவு சித்தாந்தம் கற்றவராய் வேதாந்தம் உணர்ந்து நூல்செய்தார் என்று கருதுதல் பொருந்தும்' என்று குறிப் பிட்டுள்ளார்கள்.

இந்நூல் சிவஞானசித்தியாரைப் பின்பற்றி எழுந்த தத்துவப் பிரகாசம், தத்துவரத்னகரம், சிவார்ச்சனு போதம் முதலியவற்றைப் போன்றே உள்ளமையினுல், இது சிவஞானசித்தியாருக்குப் பின்ன ரும் தத்துவராயருக்கு முன்னரும் தோன்றியது என்பது தெளிவு. இதன்காலம் சுமார் 1400–ஐ ஒட்டியதாகலாம் எனத் திரு. மு. அருணு சலம் அவர்கள் கொள்ளும் கருத்து ஏற்புடையதேயாகும்.

மெய்ம்மொழிச் சரிதை பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பெரும் பகுதியதாய் மொத்தம் (124 + 361) = 485 பாடல்களைக் கொண்டுள்ளது. பரபக்கத்தின் முற்பகுதிக்கும் இடையிற் சில பகுதி களுக்கும் உரிய ஏடுகள் சிதைந்துவிட்டன. இதன் மூன்றிலொரு பகுதி அழிந்து போயிற்று; அதனை அறிவதற்கு வேறு ஏடு எதுவும் கிட்டவும் இல்லை ஆனுல், சுபக்கப் பகுதி முழுமையாயுள்ளது. எனவே, இந்தப் பதிப்பில் சுபக்கப் பகுதியை முதற்கண் தந்து, நூலின்முற்பகுதியாய் அமைந்த சிதைவுற்ற பரபக்கப் பகுதியைப் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளேன். முகவுரைப் பகுதி என்னும் தொடக்கப்பகுதியில் சில அடிகள் தவிர ஏனைய வெல்லாம் சிதைந் துள்ளன. இதனுல் நூலைப்பற்றியும் ஆசிரியரைப்பற்றியும் உள்ள அருமையான செய்திகள் அழிந்து போயின. கிட்டிய வரையில் பரபக்கத்தில் நையாயிகம், லோகாயதம், மாயாவாதம் பற்றியவற்றில்

சில பகுதிகளும் சாதிபேதம் பற்றிய பகுதியும் மட்டுமே காணப் படுகின்றன.

இந்நூலில் சுபக்கப் பகுதி 'பதிபேதம்' என்பது முதலாக 'வினு வுரை ஈருக 19 பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்நூலுள் காணப் படும் பாடல்கள் முழுமையும் அறுசீர் விருத்தங்களாயுள்ளன.

இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் சீடன் வினவக் குருவானவர் விடையிறுப்பது போன்ற அமைப்பில் உள்ளது. 'பதிபேதம்' பற்றிய பகுதி தொடங்கும் போது சீடன், சமயமாம் பார் தாக்காமல் தன்னைச் சேமமாகக் கொண்டுவந்தது போன்று சிவபெருமான் அருளிய ஆகமத்தின் பொருளை விளக்கிக்கூற வேண்டுகிருன். அதற்கு விடையாகக் குரு, 'தீதிலாப் பதியாயுள்ள சிவ முதல் தத்து வங்கேள்' என்னும் பீடிகையுடன் சொல்லத் தொடங்குகிருர். இவ் வாறே ஒவ்வொரு பொருட் பகுதியும் அமைதல் காணலாம். ஒரு சில பகுதிகளில் ஆசிரியரே சீடனின்ஐயத்தை மேலிட்டுக்கொண்டு விளக்கம் தருவதாயும் உள்ளது. தாண்டவ மூர்த்தி சுவாமிகள் செய்த 'கைவல்லிய நவநீதம்' குருசீடர் உரையாடலாய் இருப்பதை போன்ற அமைப்பில் இவ்வாசிரியர் விளக்கும் பொருட் பகுதி களும் உள்ளமை சிந்தித்தற்குரியது.

மெய்ம்மொழிச் சரிதை நூலுக்கு உரை விளக்கமும் ஏட்டுப் பிரதியில் காணப்படுகிறது. இவ்வுரையை நூலாசிரியர் வழிவந்த மாணுக்கர் யாரேனும் இயற்றியிருத்தல் கூடும். இந்நூலின் உரை பெரும்பான்மையும் பொழிப்புரையாயும் சில இடங்களில் கருத்து ரையாயும் அமைந்துள்ளது. ஒருசில பாடல்களுக்கு விரிவுரையும் உண்டு. இந்த உரையின் போக்கில் சமய சங்கேதச் சொற்களும் பிறகுறிப்புச் சொற்களும் கலந்து காணப்படுவதால் எளிமையானது என்பதற்கில்லை. சிற்சில இடங்களில் மணிப்பிரவாள நடைபோன்றும் உள்ளது.

எடுத்துக்காட்டாகச் சுபகத்தின் முதலிரண்டு பாடல்களின் உரையை முதலில் காண்போம்:

> "இதன் கருத்து ஆராதசுக சுவரூபமான மோட்சமாகிற அந்தக் கரைக்கு ஞானமென்கிற தோணியையுடையாதபடிநோக்கிக் கொண்டு போந்தாற் போல சுவாமி பெரியதாயிருந்துள்ள ஆகமத்தின் பொருளையருளிச் செய்ய வேணுமென்றவாறு." (1)

> "சிவாகமத்தில் ஞானயோகக் கிரியா சரிதமென்னும் நூலில் ஞான பாதத்தில் சொல்லப்பட்டன பதி பசு பாச மூன்றிற் பதியாயுள்ளவன் சிவன். பசுவென்பது அணுவாயுள்ள ஆன்மாக்களை. பாச மென்று சொல்லப்பட்டது அஞ்சு. கேடில்லாத சிவன் முதலாயிருந்துள்ள தத்துவங்களைச் சொல்லுகிறேமென்றவாறு." (2)

பரபக்கத்தில் சாதிபேதம் என்னும் பகுதியின் இறுதிப்பாடலுக்குரிய உரையையும் காண்போம். இது சாதி ஒன்றே. என்பதனையும் பேதம் எல்லாம் கற்பனையே என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

> "இதன் கருத்து: கீழ்ச் சொல்லிப்போந்த கிரமத்தால் மனித்தர் யோனியெல்லாம் ஒருசாதி யென்றறிந்து கொள்க. வேதத்துக்கு யோக்கியன் பிராமணனென்று சொல்லின் அல்லாதவர்களுக்கு மாறுபாடா நிற்கும். அது நிற்கச் சாதி பேதங்களுண்டென்று சொல்லுமவையெல்லாம் கற்பனை யென்று கொள்வது யெத்தா லென்னில் பரமேஸ்வரன் அருளிச் செய்த திவ்யாகமங்களில் ஞானபாதத்தினருளிச் செய்யும் அருத்தங்களருமையாயிருக்கும். அந்த ஞானபாதத்திற்குச் சாதி யெல்லாம் ஏக சாதி யென்னும்படிக்கு ஏது திட்டாந்தரங்களால் அருளிச்செய்தருளித்து. ஆதலாற் சாதி பேதம் கற்பனை யென்றறிந்து கொள்க என்றவாறு."

இவ்வாறு பல்வேறு வகையில் இந்நூற்பாடல்களின் உரைவிளக்கம் உள்ளது. மூலபாடங்களை நிர்ணயிப்பதற்கு இந்த உரையும் பெரிதும் பயன்பட்டது.

இந்நூலாசிரியர் பெயர், 'இளங்காரிகுடி மெய்ம்மொழித்தேவர்' என்பது ஏட்டுப் பிரதிக் குறிப்பினுல் தெரியவருகிறது. ஆசிரியர் தம் பெயராலேயே நூலையும் 'மெய்ம்மொழிச்சரிதை' என்று குறித்தனர் போலும். இந்நூலின் ஐந்தாம் பகுதியான தத்துவ சிருட்டிப்பகுதி முடிந்ததும் பின்வரும் வெண்பா ஒன்று காணப்பட்டது.

> 'எண்ணிலாப் புத்தாதி யெப்பொருட் டட்டறுத்து
> விண்ணிலார்க் கும்மரிய வீட்டின்பம்—பண்ணி
> விளங்குமிளங் காரிகுடி மெய்ம்மொழித் தேவன்
> களங்கமறுத் தானிந்நூல் கண்டு.'

இப்பாடல் நூலாசிரியர் வாக்கன்று என்பதும் வேறொருவரால் பாடப்பட்டது என்பதும் பாடலைப் படித்த அளவிலேயே விளங்கும். அதனுல்தான் தத்துவசிருட்டிப் பகுதியின்பின் இப்பாடலை நூலுள் சேர்த்து அச்சிடவில்லை. சிறப்புப் பாயிரமாய் இஃது அமைந்துள்ளது. இதனுல் நூலாசிரியர் இளங்காரிகுடியைச் சார்ந்தவர் என்பதும், 'மெய்ம்மொழித் தேவன்' என்பது இவர்தம் இயற்பெயர் என்பதும் விளங்கும். 'தேவர்' என்பது சமய உபதேசம் பெற்றுச் சிறந்து விளங்கும் உயர்ந்தோராகிய துறவியரைக் குறிக்க வழங்கும் பெயராகும். ஆதலால், இவரும் துறவியாயிருந்தாரென்றும், அந்த நிலையில் இந்த நூலை ஆக்கினுர் என்றும் கருதலாம்.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் இடம்பெற்ற மெய்ம்மொழிச் சரிதை என்னும் இந்நூல் இதுவரை முழுமையும் அச்சாகாத நூல்

களுள் ஒன்று. இதற்குரிய ஏட்டுப்பிரதிகளும் பரவலாக இல்லை. அதனால் அத்திரட்டில் உள்ள நூற்பெயர் ஒரு கற்பனைப்பெயரோ என்று கூட ஐயுற்றவர்களும் உண்டு. இந்த ஐயங்களை யெல்லாம் நீக்கும் வகையில் ஒரேயொரு பிரதியாய் இது மறைந்த மதிப்பிற்குரிய பெருந்தமிழ்ப் புலவர் வேலம்பாளையம் ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களிடம் இருப்பது தெரியவந்தது. உரையுடன் கூடிய இந்த நூலின் ஏட்டுப்பிரதியைப் பெரியார் தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களே பிரதி செய்து வைத்திருந்தார்கள். இந்தக் கையெழுத் பிரதியைப் பெற்று வந்து தமிழாய்வில் வெளியிட ஊக்கம் தந்த தமிழன்பர் பல்கலைச் செல்வராகிய கடலூர் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களாவர். முதுபெரும் புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் மறைவதற்கு முன்பாகவே இதனை வெளிக்கொண்டுவர வேண்டும் என்று பெரிதும் முயன்றும் ஒருசில குறுக்கீடுகளால் முன்பே அச்சிட இயலாமற்போயிற்று. பற்பல பழஞ்சுவடிகளையும் பெருவிருப்புடன் தொகுத்து மிகுந்த சிரத்தையுடன் அவற்றைப் பிரதிசெய்து வைக்கவும் முற்பட்டுள்ள தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுடைய தமிழ்ப்பற்றை எவ்வளவு போற்றினாலும் தகும். அப் பெரியாரின் மறைவுக்குப்பின் இது வெளிவரினும் இந்நூலைத் தேடித் தொகுத்து வைத்துக் காப்பாற்றி வழங்கிய பெருமை அவர்களையே சாரும். அவர்கள் வழங்கிய கையெழுத்துப் பிரதியைக் கொண்டே இந் நூலின் மூலம் மட்டும் இப்பொழுது அச்சிடப்பட்டுள்ளது.

மூல ஏடு கிட்டப் பெருமையாலும் வேறு பிரதிகள் கிட்டாமை யாலும் இந்நூலின் உரையையும் உடன் சேர்த்து அச்சிடத் தயங்கி, மூலம்மட்டுமே பதிப்பிக்கலாயிற்று. இனி, உரையுடன் இந்நூல் மேலும் சிறப்புற வெளிவருவதற்கும் இம் மூலப்பாடப்பதிப்பு முன் மாதிரியாய் உதவலாம் என்று நம்புகிறேன். இந்நூலுக்குரிய ஏடு யாரிடமேனும் இருக்குமாயின் தந்துதவினால் இனிவரும் பதிப்பு மேலும் செம்மையுறுவதற்கு வழி யாகும். ஆதலால் இந்நூலின் பிரதிபற்றித் தெரிய வருமாயின் அறிவிக்குமாறும் தந்துதவுமாறும் தமிழன்பர்களைப் பெரிதும் வேண்டிக்கொள்கிறேன்.

மூலப் பிரதியை வழங்கிய மறைந்த பெரியார் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக. இந்த நூற் பிரதியைப் பெற்று வந்து தந்ததோடு வெளியிட வேண்டும் என்று அடிக்கடி தூண்டிய பெரியார் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர் களுக்கு என் வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

சென்னை-5
3—8—77.

**மு. சண்முகம் பிள்ளை**

# சுபக்கத்தின் பொருளடக்கம்


| பொருள் | பக்கம் | பாடல் |
|---|---|---|
| 1. பதிபேதம் | 1 | 49 |
| 2. செகத்துற்பத்தி | 7 | 17 |
| 3. பசுவிலக்கணம் | 9 | 36 |
| 4. பாச இலக்கணம் | 13 | 10 |
| 5. தத்துவசிருட்டி | 14 | 44 |
| 6. வீடு பற்று | 19 | 17 |
| 7. அவத்தாலக்கணம் | 21 | 17 |
| 8. முத்திசித்தியிலக்கணம் | 23 | 10 |
| 9. ஆசாரியலக்கணம் | 24 | 17 |
| 10. சீஷலக்கணம் | 26 | 9 |
| 11. தீக்ஷாலக்கணம் | 27 | 5 |
| 12. அத்துவாவிலக்கணம் | 28 | 24 |
| 13. சமயாசாரம் | 31 | 12 |
| 14. அட்டாங்க யோகம் | 33 | 42 |
| 15. அரும்பொருள் கூறல் | 38 | 9 |
| 16. தனையறியோகம் | 39 | 6 |
| 17. பரமயோக லக்கணம் | 40 | 10 |
| 18. அனுபோகலக்கணம் | 41 | 15 |
| 19. வினவுரை | 43 | 12 |
| | | 361 |

பின்னிணைப்பு :

| | | |
|---|---|---|
| *பரபக்கம்* | 45 | 42 |
| பாடல் முதற்குறிப்பு அகராதி : | | |
| சுபக்கம் | 51 | |
| பரபக்கம் | 56 | |

இளங்காரிகுடி

*மெய்ம்மொழித்தேவர்*

அருளிய

# மெய்ம்மொழிச் சரிதை

## *சுபக்கம்*

### *1. பதிபேதம்*

1. அமைவி லின்பக் கரைக்கிங் கறிவெனுந் தோணி பற்றிக்
கமைவிலாப் பிறவிப் பௌவங் கடந்தேற லுறுகின் றேற்குச்
சமையமாம் பார்தாக் காமற் றவிர்த்துநீ கொடுபோந் தாற்போல்
எமையையா ளுடையாய் நல்கா யிருஞ்சிவ ஞக மார்த்தம். 1

2. நாதனற் சிவாக மஞ்சொல் நாலு பாதத்து ஞான
பாதநற் பொருள்கள் மூன்றும் பதிபசு பாச மென்றே
யாதிநற் பதிசி வன்று னணுப்பசுப் பாச மைந்தாந்
தீதிலாப் பதியா யுள்ள சிவமுதல் தத்து வங்கேள். 2

3. திரிவித தத்து வங்கள் சிவசதா சிவம கேசம்
விரியுநற் சிவம தொன்றும் விளம்பிடிற் சகள மல்ல
புரிதரு சகளா சகளம் பொருந்திடுஞ் சதாசி வன்றுன்
றெரிதரு சகள மாகுஞ் செப்பிடில் மயேச மன்றே. 3

4. மன்னுநற் சிவம தேகம் மதித்திடிற் சதாசி வன்றுன்
பண்ணிடு பஞ்ச பேதம் பஞ்சவிஞ் சதிம யேசம்
சொன்னதத் துவங்கள் மூன்றிற் றேன்றிடு முப்பத் தொன்று
முன்னுமவ் வுணர்வுக் கெட்டா வொண்சிவ முரைப்பக் கேணீ. 4

5. இப்படி யிருப்ப தொன்றென் றியம்புவ தொன்ற தின்றி
யொப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந் துணர்வா யென்றுந்
தப்பில்பே ரின்ப மாகிச் சந்ததம் விளங்கி யெங்கு
மப்படி யிருப்ப தொன்றங் கதற்கமாஞ் சிவம தென்றே. 5

6. நிராமயன் நிர்க்கு ணத்தன் நின்மலன் நித்தன் சுத்தன்
பராபரன் சூக்கிஷ் மத்தன் பாவக மொன்று மில்லான்
புராதனன் போதா னந்தன் புகலுமவ் வளவுக் கெட்டா
விராமயன் மாயா தீத னென்றுகொள் சிவம தென்றே. 6

7. தத்துவ மனைத்துஞ் சாரான் சைதனன் சாந்தன் சுத்தன்
மத்தமா மலாதி பாசம் மயக்குறான் வடிவொன்றில்லான்
நித்தனா யேக னாகி நிரவய னாய னாதி
முத்தனாய் முத்தி நல்கு முழுமுதல் சிவம தென்றே. 7

8. எல்லாந்தன் னுள்ள தாகி யெவைகளுந் தானே யாகிச்
சொல்லாத பொருளு மாகித் தொல்லையா யெல்லை யின்றி
யல்லாதோர் வடிவொன் றின்றி யானந்த வடிவே யாகிக்
கல்லாதோர் காட்சி யாகிக் கலந்துதா னி[ற்ப னன்றே.] 8

9. அன்றியொன் றில்லாம லாலே அகிலமுந் தானே யாகு
மென்றிங்ங னியம்ப லாகி யீறிலா வின்ப மாகி
யொன்றுடன் பற்று மின்றி யொழிவற நிறைந்து மேலாய்
நின்றது பரம தென்றே நிகழ்த்தின மறைக ளெல்லாம். 9

10. தோற்றமு மாதி யாய தொழிலைந்துந் தன்க ணாளு
மேற்றவச் சத்தி கட்கங் கேதுவாஞ் சேட்டை மற்றும்
வேற்றுமை யிலாத லாலே விளம்புவர் சிவம தென்று
சாற்றினமற் றொன்று மல்லாத் தன்மையன் சயம்பு வன்றே. 10

11. பெண்ணலி யாணொன் றில்லான் பெத்தமு முத்தி யில்லான்
வண்ணமும் வடிவு மில்லான் வரவொடு போக்கு மில்லான்
றிண்ணிய பொருளாய் மேலாய்ச் சேமமா யரிதாய்க் கொண்டு
வெண்ணிலா வானாய்த் தூய்தா யிருப்பது சிவம தென்றே. 11

12. சத்தியுந் தானுங் கூடிச் சகல பல் லுயிர்க டோறு
மொத்துயி ராகி னிற்க வுருவிதென் றுணர வொண்ணா
னத்தன்மை யவற்றுக் கெல்லா மாதார னானே யென்னும்
சித்தமு மில்லா வின்பஞ் சிவமெனப் படுவ தன்றே. 12

13. பொறிகள் போய்ப் புறக்க ணெங்கும் புலன்கள் மேற் பொருந்து
வறிவற நோக்கிக் கொண்டே யகமுக மாயி னாற்குப் [கின்ற
பொறிபுலன் கரண மெல்லாம் புறம்புமுள் பொழிந்து மேலாய்க்
செறிவுறு மின்ப வெள்ளஞ் சிவமெனப் படுவ தன்றே. 13

14. பன்னுமெந் நூல்க ளாலும் பகருமவ் வளவை யாலும்
மன்னுமிப் பொருள தென்கை வாசக ஞான மாகும்
உன்னுமவ் வுணர்வுக் கெட்டா ஒப்பில் பேரின்ப வெள்ளம்
தன்னனு போக மாகத் தான்றனிற் காண்ப தொன்றே. 14

15. தத்துவஞ் சகலோற் பத்தி தான்செக சிருட்டி யாய
உத்தம யோகி கட்கு முபகார நிமித்த மாகச்
சுத்தநற் சிவத்தோர் சிந்தை சுபாவசத் தியினாற் றோற்றி
லத்தி லாயிரத் தொன்றி லரும்பரா சத்தி தானே. 15

16. ஆதியாஞ் சத்தி தோன்றி யத்தி லாயிரத் தொன்றிற்
பேதியா விச்சை யத்திற் பிறந்ததாங் கதனிற் பின்பே
லோதிலா யிரத்தி லொன்றி லுதித்தது ஞான சத்தி
தீதிலாக் கிரிகை யும்பின் செனித்தாங் கதனி லன்றே. 16

17. ஒப்பிலாச் சிவத்தின் கண்ணின் றுதித்தவிப் பராசத் தீதான்
செப்பிலாங் கந்த மென்றும் தேர்ந்திடிற் சகள மன்று
தப்பிலாப் பரையோ டாதி சத்திகள் கூட்டந் தன்னில்
அப்படிச் சதாசி வந்தா னுதித்ததென் றறிந்துங் கொள்ளீர். 17

18. சிந்தித்து வணங்கு வார்க்குத் தியானஆ சாந்த மாகச்
சந்தித்துச் சகளா சகளஞ் சதாசிவ மாகு மன்றே
வந்திக்குஞ் சதாசி வன்றன் மதிக்கி லேந்தா மிவற்றின்
முந்தித்துச் சிவம தன்றன் மூத்திகத் திருக்குங் கன்மம். 18

19. சுத்தநற் சிவம தென்றுஞ் சொல்லிடிற் சதாசி வன்றன்
வித்தக வமுத்த மூத்தம் விளங்குநற் பரம மூத்தம்
கத்திருட தீய மென்றுங் கன்மமீ சான மென்றும்
தத்துவம் [பகர்ந்த தைஞ்சு]ஞ் சதாசிவ மைஞ்சு மன்றே. 19

20. தத்துவ மூர்த்தி பாவஞ் சாற்றிடு மிந்த மூன்றிற்
தத்துவஞ் சிவத்தி னென்றுஞ் சதாசிவ மாதி மூர்த்தி
தத்துவ மூர்த்தி யாகித் தற்சுவ ரூபத்தைப் ப[ர]வந்
தத்துவ மூர்த்தி பாவஞ் சதாசிவ மான தன்றே. 20

21. சந்ததஞ் சிவம்பா வத்தாற் சதாசிவ மான தென்றும்
சிந்தை செய் சகளா சகளந் தேகமுந் தேகி தானும்
அந்தமி லிரண்டின் பாவ மகிலபூ சாத்த மாகும்
பெந்தமில் சதாசி வத்திற் பேதமா றுதித்த வாகேள். 21

22. சாற்றிடி லாதி சத்தி தன்னிலே பத்தி லொன்றிற்
றோற்றிடு மூர்த்த மான துகளிலாச் சதாசி வன்றன்
சீற்றமி லிச்சா சத்தி பத்திலொன் றதிலு தித்துப்
போற்றிடப் படுந்தான் போதம் மூர்த்தியாஞ் சதாசி வன்றன். 22

23. அலந்தமெஞ் ஞான சத்தி யத்திலே பத்தி லொன்றிற்
கலந்துதான் தோன்றிற் றன்றே கதித்திரு சதாசி வன்றன்
சலந்தரு கிரியா சத்தி தன்னிலே பத்தி லொன்றில்
நலந்தரு கன்ம ஞம சதாசிவ முதித்த தன்றே. 23

24. பீடலிங் கத்துத் தானும் பேசிடிற் கன்ம மூர்த்தம்
நாடின விந்துப் பீடம் நாதமாம் இலிங்க மென்றும்
கூடுமவ் விரண்டிற் கன்ம சதாசிவம் கூடி லன்றே
தேடிலாக் கத்தி ராதி கேவல நாத மூர்த்தி. 24

25. விந்துமத் திமத்த தாகும் விளங்கிடு நாத மென்றும்
மந்தநா தத்தே கந்தான் மலமற மூர்த்தி சொல்லில்
சந்தத மூர்த்தி தன்னிற் றத்துவங் கேத மாகும்
சிந்தைசெய் தத்து வத்திற் சிவன்கேத மாகு மன்றே. 25

26. இந்தவிச் சிவமா யுள்ள விலிங்கத்தில் யாவும் தோன்றி
யந்தத்திற் கெதமாய் நின்றே யத்திலே யிலைக்கும் முன்தான்
இந்தவிச் செகத்துற் பத்திக் கேதுவாம் யோனி லிங்கம்
அந்தத்திற் கேதுவாம் கன்ம சதாசிவ மான தன்றே. 26

27. திருத்தமாஞ் சதாசி வாதி செப்பிய பேத மைந்தும்
பொருத்தமாய் யோகம் போற்று கன்மசா தாக்கி யந்தான்
கருத்தனும் கன்ம மாய சதாசிவந் துடங்கி மேன்மேல்
ஒருத்தனும் சிவத்தே சொல்ல வொன்றையொன் றடைந்து
[நிற்கும். 27

28. கொடியவன் பிறப்ப றுக்கும் கூர்த்தமெய்ஞ் ஞான மெய்த
கடிகொண்மா மலர்க டூவி கசிந்துள நியம முற்றோர்
அடிகளாஞ் சதாசி வத்தர் அடியிணை வணங்க லாலே
வடிவினோ டவனி ருக்கும் வண்ணமும் இயம்ப லுற்றும். 28

29. பஞ்சமந் திரமே சாந்தம் பழுதிலாச் சத்தி யத்தார்
பஞ்சமாந் தொழில்க ளைந்தாற் பாவகஞ் சகலா சகலம்
பஞ்சபூ தங்கட் கீசர் பஞ்சமா மவற்றுல் வண்ணம்
பஞ்சமா முகங்க ளென்றும் பகர்ந்திடிற் சதாசி வற்கே. 29

30. பங்கயா தனமா மேனி படிகமாம் முடிமே லென்றும்
திங்களாம் முகங்க ளைந்தில் திருநய னங்கள் மூவைந்
தங்கமோ ராறு மெனறும் மத்தமும் பத்த வற்றிற்
தங்குமா யுதங்கள் பத்தாம் சாற்றுகம் பேறும் இன்னம். 30

31. பஞ்சநன் முகத்தீ சர்மைப் படிகமாங் குங்கு மந்தான்
வஞ்சமில் புருட னுகு மதித்திடி னகோர மென்று
மஞ்சன வண்ண மாகு மிரத்தஞ்சீர் வாம மாகும்
வெஞ்சொலிற் சத்தி யோசை விளங்கிடுந் தவள மாமே. 31

32. சந்திர னிருத யந்தான் சாமமாம் சிரத்தின் வண்ணம்
சிந்துரஞ் சிகைய தாகுஞ் சிறந்திடுங் கவசங் கார
மத்திரத் திலங்கு மின்போ லாதலால் நேத்தி ரந்தான்
சுந்தரச் சுடரே போன்றுந் துலங்குமத் திறம தென்றே. 32

33. பட்டிடுங் கொலேவேல் சூலம் பரசுவா ளபய மைந்தும்
மொட்டிடு வலத்தே யென்று மிடத்துறு மஞ்சுஞ் சொல்லிற்
கட்டிடும் பாச நாகங் கனலுடன் றேட்டிக் கண்டஞ்
சட்டமாஞ் சதாசி வத்தர் திருவுரு விதுவி னங்கேள். 33

34. காரியங் கன்மற் கீதாங் கத்திருப் பளிங்காங் கன்னஞ்
சீரிய மூத்தி மூத்தம் செஞ்சுடர் விடுதீப் போலும்
சூரிய ரனந்த கோடி சோதிபோல் மூத்த மாகும்
தேரிலோ கலேயி லாமற் சிவசதா சிவற்கொன் றில்லே. 34

35. நேர்ந்திடுங் கிழக்குக் கன்மம் நீரகத் திருந்த தெற்குமா
மார்ந்திடு மேற்குமூர்த்தி யம்மூர்த்தி யிவ்விடக் குதறை
யோர்ந்திடி னூர்த்த மாகுஞ் சதாசிவற் குரைக்கில்...
சேர்ந்திவை கன்மே சற்குத் திருமுக மைந்தா மன்றே. 35

36. உன்னிமுன் சிவமூ லத்தை யூத்த மும்பர் முகத்தான்
மன்னுநற் கன்மே சம்போல் மனத்தினுற் கற்பித் தத்தைச்
சொன்னவ் விதியி னுலே துகளறப் பூசை பண்ணி
பண்ணுமப் பூசாந் தத்திற் பண்டுபோற் பாவி யின்றே. 36

37. இந்திர சாப மெங்ஙன் தற்பணத் திலங்கு மங்ஙன்
மந்திர மூர்த்தி யைந்தான் மனத்தினுற் சிவன்கற் பிக்கத்
தந்திரச் சகள மில்லிச் சகளமாம் பாவ கத்தா
லந்தரச் சதாசி வம்பின் பெதிர்முக மாகு மன்றே. 37

38. பாவக மெய்யோ வென்னிற் பார்க்குமக் கருட னுதிப்
பாவகங் கொண்டு பார்க்கப் பருவிடந் தீரு மாங்கே
பாவகச் சிவம்பா விக்கப் பண்டையஞ் ஞானம் போய்ப்பின்
பாவக மில்லா ஞானம் பயந்தின்பப் பரமா மன்றே. 38

39. கலேகளீ ரெட்டில் வன்னிக் கலேகளேந் தாம மத்தோடு
நிலேயுளீ ரைந்தொ டொன்று நிகழ்வித்து நாலெ ழுத்தை
விலேயிலா விந்து நாத மெய்க்குயிர் கொடுத்தாங் காக்கித்
தலேயிலே பிரம மஞ்சு சடங்கமுச் சரிக்க வன்றே. 39

40. ஈரெட்டுக் கலேயி லாறு யீரேழா மெழுத்தி னேரு
மோரெட்டாம் வர்க்கந் தன்னி லொருமூன்றே டொக்கக்கூட்டிச்
சீரெட்டு விந்து நாதந் திகழவுச் சரிக்கக் கொன்றைத்
தாரிட்டுச் சதாசி வத்தா தாமுகஞ் செய்வ ரன்றே. 40

41. சார்ந்தநற் கன்ம மாய சதாசிவா யிரத்து ளொன்றிற்
போந்தனர் மகேசர் தாமும் பொருந்திய சகள மூர்த்த
மார்ந்தவம் மகேசர் தாமும் யனேககோ லங்கள் கொண்டு
வேந்தரா யியந்தி ரத்து விளேயாடச் சகத்தைக் கொண்டே. 41

42. பலவகைச் சகத்தை யெல்லாம் பண்ணியு மளித்த ழித்தும்
பலவகை யுயிர்கட் கென்றும் பரிந்தரு ளதுவே பண்ணப்
பலவகை மூர்த்த மான பஞ்சவிஞ் சதிம கேசர்
பலவகை நாம மெல்லாம் பகர்ந்திட லுற்ற தன்றே. 42

43. இந்துமுன் றரித்தோ னுரி பாகன்தன் னிடப வாகனன்
கந்தரக் கூத்தன் விவாக சுந்தரன் பலிகொள் மூர்த்தி
கந்தனிற் காம னுசன் காலாக்கினி தேவர் மற்று
மந்தரத் திரிபு ராந்த னுறது சூடி யன்றே. 43

44. வெங்கரி யுரித்தோன் வீர பத்திர னரிய ரன்ருன்
சங்கையி லத்த நாரீச் வரன்கங் காள வேடன்
பங்கமில் தண்டிக் கீந்த பராபர னஞ்சை யுண்டோ
னங்கையி லாழி மாலுக் களித்தவ னல்ல துங்கேள். 44

45. ஒப்பில்விக் கேசர்க் கீந்தோன் யுமார்கந் தேக பாதன்
செப்பினற் சுகாத னென்ருன் றெக்கினி லிங்க மூர்த்தி
இப்படி யிருபத் தைந்தாம் மகேச ராயிரத்தோர் கூற்றில்
தப்பிலா உருத்தி ரேசர் தாமவர் தரித்தா ரன்றே. 45

46. கோதிலா மகேசர் தம்பால் கோகுகூற் றெுன்றின் வந்து
தீதில்மா லயனு மங்கே செனித்தனர் என்று கொள்ளே
சோதியா மிரவி இந்து சுடருமுக் கண்ணிற் ருேன்ற
வாதிநற் கணேசன் கண்டத் தறுமுக னிருதயத்தே. 46

47. பன்னீ ராதித்தர் உந்தி பகர்ந்திடில் உரோம மான
தன்னிலே நாலேழ் கோடி தனித்தனித் தேவர் தோன்றித்
துன்னியே யிருடி மாரும் தோன்றினர் நாலேழ் கோடி
மன்னிய மயேசு ரோம மற்றவர் வக்கி ரத்தே. 47

48. தத்துவ பேதஞ் சொன்னேம் சத்தியுற் பவங்கேள் விந்து
பத்தி லொன்று மாறிதற்குப் பத்திலொன் ருகு மாம்பி
யத்திலும் கெணும்பி யாங்கே யதிலும்ஈ சுவரியு மாங்கே
சுத்தமாம் மனேன்ம ணீயும் தோன்றினள் அதிலு மாங்கே. 48

49. உன்னுமம் மனேன்ம ணீயாம் அதனெளி கோடி கூற்றில்
மன்னுநற் கவுரி தோன்றி மற்றவள் கோடி கூற்றில்
தன்னிலே செல்வி யோடு சரசுவதி துர்க்கை யாதி
பின்னமாய் அனந்த சத்தி பிறந்தன ரென்று கொண்ணீ. 49

பதிபேதம் முற்றும்.

## 2. செகத்துற்பத்தி

50. வாலிய சிவந்து டங்கி மகேசர்தா மந்த மாகப்
பாலியா வுதித்தெ ழுந்த பதிபதார்த் தங்க ளெல்லாங்
கோலிய முப்பத் தொன்றுங் கூறிநீ யருளி னுற்போல்
சீலர்கட் கிரங்கு மெந்தாய் செகத்தினுற் பத்தி யெங்ஙன். 1

51. மன்னுநற் சிவத்திற் சத்தி மதித்திடி லிருவ கைத்தாய்
பின்னமற் றிருப்ப தென்றும் பின்னமா யிருப்ப தென்றும்
மன்னிய சிவத்தைப் பின்னை மாசில்சிற் சத்தி யாகும்
பின்னமா மதுச டந்தான் பேர்சொல்லின் மாயை யன்றே. 2

52. அரியனு யறிதற் கொண்ணு வரும்பரஞ் சிவற்கு நாளும்
தெரியுமா றுருவ நாமஞ் சிறந்தசிற் சத்தி யாகும்
பிரிவிலாச் சிவத்துக் கென்றும் பின்னமா மாயா சத்தி
விரியுமா செகத்துத் தோன்றும் விதத்ததாய் மேவு மன்றே. 3

53. ஒத்தவவ் வியத்தம் வீச முபாதானஞ் சகத்தி யோனி
யெத்தகா ரணநி மித்தம் பிரதானம் பிரகிருதி யென்றும்
மத்தமா மாயை யென்று மகமாயை யென்றும் பேராய்
நித்தமாஞ் சிவமென் றன்றே நிகழ்ந்திடு மதுவு மன்றே. 4

54. பரஞ்சித்தி லுதியா நின்ற பல்கி ரணம்ப தித்தங்
கிரஞ்சித்த போது நாம மெழில்கொள் குண்டலி மாயைக்குச்
சிரஞ்சித்தன் புணர்ச்சி யாலே செகத்தைமுன் கெற்பித் தாங்கி
யுரஞ்சித்தா னின்று தானே யுலகங்க ளீன்ற தன்றே. 5

55. சுருக்கமில் சிவத்தின் சத்தி தோய்ந்தபின் மாயா சத்தி
தருக்கியே கெற்பந் தாங்கிச் சகத்தைமுன் பெற்ற தன்மை
யருக்கனக் கிரண மேற்க வந்தரத் திலங்கு மேகம்
பெருக்கநீர் கெற்பித் தாங்கே பெய்யுமா மழைபோ லன்றே. 6

56. சிற்சத்தி தானே யொன்றைச் செய்திட மாட்டா தாகும்
சிற்சத்தி யொழியச் சேட்டை செடமாயை தனக்கு மில்லை
சிற்சத்தா முயிரே கூட்டிச் செடவுடல் சேட்டித் தாங்கே
சிற்சத்தி கூட்டி மாயை செகத்தினை நடத்து மன்றே. 7

57. சித்துட னசித்து மாயே சிவசத்தி யிருப்ப தென்றுஞ்
சித்துட னசித்தி டத்தே செகத்தினுற் பத்தி தானும்
சித்துட னசித்து மாக்கும் செகந்தனிற் சராச ரங்கள்
சித்துட னசித்தா யுள்ள சிவசக்தி மயஞ்ச கத்தே. 8

58. ஒன்றொடொன் றெவ்வா தேனும் ஒழிந்தவச் சகத்தி யாவும்
துன்றிடு மாயை தன்பால் தோன்றிடு மாறு கேளாய்

நின்றடி யொன்ற நேகம் கொம்பிலே நிறைந்த காய்பூ
என்றவை யனைத்தும் வித்தொன் றதிலெழு மாறு போற்காண். 9

59. நித்தம்போ லநித்த யாக்கை நிலையெனக் கருது வித்துச்
சுத்தமா மின்பம் போலத் துன்பத்தைத் தோற்று வித்துப்
பெத்தமா முயிர்கள் புத்தி பிரமிக்கப் பண்ணு மித்தால்
மத்தமா மாயை யின்றன் மயமதே செகத்தி யாவும். 10

60. எடுத்தவவ் வுடல்க டாமே யிரமித்தெவ் வுயிர்க டகத்தில்
அடுத்தவப் பயனு கர்ந்தே யகத்திலே திருத்த மாக்கித்
தடுத்துமே லறிய வொட்டாத் தந்திசை மயக்க மெல்லாம்
அடுத்திடு மாயை யின்றன் மயமதே யகில மெல்லாம். 11

61. இருடிக ளிமையோர் மற்றும் மோகத்தால் விடவல் லார்க்கு
மருடிக ளுடல்விட் டோட்டா மாயையின் வலியைப் பாராய்
யருடிகழ் மெய்ஞ்ஞா னத்தா லியாக்கையைப் போக்கி யின்பப்
பொருடிகழ் முத்தி யெய்தும் புண்ணியற் குவமை யுண்டோ. 12

62. பிறப்பதே பேணி நாளும் பெரியதோ ரின்ப மென்றே
யிறப்பதே தொழிலா யென்றும் மேடணைத் திரைய முற்றுச்
சிறப்பதே யுடைய வின்பச் சிவத்துடன் கூடா வண்ண
மறப்பதே பண்ணு மத்தால் மாயையின் மயஞ்ச கத்தே. 13

63. இதுவென வறிதற் கொண்ணு தியாவையு மயங்கப் பண்ணு
மதுசொலின் மாயை யாகு மருவமே யுருவ மில்லை
யெதுவெனி லிச்சை ஞானத் தொழிலுமா யிருக்கு மென்னி
லதுகுண பேதத் தாலே ஆனது சத்தி மூன்றாய். 14

64. சடத்துவ மாயை யார்தஞ் சமத்தவிந் திரிய மெல்லா
மடர்த்திட வகுத்த ஞதி யவற்றிஞ லுடற்பே தங்க
ணடத்திஞற் பதிற்றெட் டோடு நான்குநூ ருயி ரம்பே
ரிடத்திலே யுடைய மூலச் சிவத்தின்றன் னிடத்தி லன்றே. 15

65. அலர்ந்தமுக் குணத்தி ரட்சி யாதலான் மாயை யென்று
கலந்துகா ரியமு மாகிக் காரணக் கருத்தா வாயே
பெலந்தரு பிரதா னத்தின் பேதமே சகத்தி யாவும்
நலந்தரு மீசர் செய்தி நாடிலங் கதுவு மாயை. 16

66. பதிபதார்த் தங்க ளாய பஞ்சகர்த் தாக்கள் தங்கள்
மதிசெய் மாயா வீசதத் துவத்தா மற்றவற் கிங்கிப்
பதிமாயை தானே யகில காரி யங்க ளெல்லா
முதிசெயப் பரஞ்சி வன்ரு னுதாசன ஞகு மன்றே. 17

செகத்துற்பத்தி முற்றும்.

## 3. பசுவிலக்கணம்

67. எண்ணிலாச் சிவன்தன் னோடே ஏய்ந்துநின் றியாவும் தோற்றம்
பண்ணுமா சத்தி தன்னைப் பகர்ந்துநீ யருளி னுப்போல்
திண்ணமாம் பாசத் தென்றும் சேர்ந்துள பசுவின் தன்மை
அண்ணலே யருள வேண்டும் அடியனேற் கறிய வென்றே. 1

68. சாற்றிடிற் பசுவ னுதி சகலமு மனுதி யென்று
தோற்றமுஞ் சிவத்தி லென்று சொல்லிடு மாக மங்கள்
சாற்றிடிற் சகத்துற் பத்தி தனக்குமற் றின்மை யாலே
தோற்றமும் சிவத்தி லென்றே சொல்லவும் படுவ தன்றே. 2

69. விண்ணினில் மழைக்குற் பத்தி வேலைநீர் வெய்யோன் காந்தங்
கண்ணியல் தீக்குற் பத்தி கலந்தநீ யன்றி யில்லை
நுண்ணிய பல்பி றப்பில் நுடங்குசை தனங்கட் கென்று
வெண்ணில் மற்றுண் டோசொல் விருஞ்சிவ னன்றி வித்தே. 3

70. முத்தனு முத்தாத் மாவும் முத்தியி லேக மாகும்
அத்தன்மை யாலு முன்பு மொன்றனு மானத் தாலும்
ஒத்தலும் பூத மைந்து மொன்ருெடன் ருென்றிக் கூடாத்
தத்தந்தா யோடுங் கூடும் தன்மையே போலான் மாவும். 4

71. சின்மய மாத லாலே செகத்தினில் சராச ரங்கள்
தன்மய முணர்ந்து பார்க்கில் சத்தியும் சிவமு மேகாண்
சின்மயச் சிவன்ருன் சீவன் சிற்சத்தி யறிவு மாயை
தன்மயம் காய மென்றே சாத்திர நிச்ச யார்த்தம். 5

72. வித்தின்றி முளைதா னில்லை வித்தின்றி முளைவே றில்லை
அத்தன்மை சிவத்தின் கண்ணி லாத்துமா வனுதி தொட்டு
நித்தமுஞ் செகத்தி யாவும் நிகழ்ந்திடுஞ் சுபாவ மிங்ஙன்
பெத்தமுஞ் சிவமென் றன்றே பிறப்பிறப் பிதுவு மன்றே. 6

73. அனுதியல் பாகிற் பெத்தம் அறுமோதா னென்னிற் செம்பிற்
றனுதியில் காளி தம்போம் தன்மைபோற் குளிகை தாக்க
வனுதியல் பெத்த நில்லா வருளினுற் குருக்க ளுைக்கத்
தனுதியல் ஆத்து மாவின் தற்சுவ ரூபத்தைத் கேளாய். 7

74. நித்தன் கேவல னிர்க்குண னிரவய னன்வி காரி
சுத்தன் வியாபகன் மருண்மையன் ருெழிலிலன் விந்து நாதச்
சத்த னசைபய னசைதன னுத்த மன்மலத் தென்றும்
பெத்த னத்தாற் பிரபுவின் பேர்பசு பதியாவ னன்றே. 8

75. பசுபதி சைத னத்தாற் பகர்ந்திடி லொப்பர் வாசி
பசுமல சம்பந் தத்தன் பதியவ னமல னென்றும்

பசுவவன் பாசந் தீர்க்கை பசுதொழி லாகுந் தீர்ந்தாற்
பசுபதி பேதஞ் சொல்லிற் பரவைசேர்ந் தியலா றன்றே. 9

76. சுத்தநற் சிவமுஞ் சீவன் சுபாவசை தனத்தா லொத்து
மொத்ததன் மாயா பேதத்துத் தானீங் கரிது யிர்க்குத்
தெத்தஞ்செய் சத்தி காட்டத் தீக்கில்லை குண்டத் தீக்குண்
டத்தன்மை யாத்து மாவு மமரநற் சிவமு மன்றே. 10

77. சட்டெனத் தெளிந்தான் சற்றும் இரைச்சுவிற் கரணு திப்பேர்
கட்டின பாசம் விட்டான் கண்டிலன் பெத்த பின்பு
சுட்டநற் சுவாய மேயாஞ் சீவன் முத்தன் தேகத்தை
விட்டபின் பரம முத்தன் வியோமம்போல் கடனு சத்தி. 11

78. மூடிமுன் னிருந்த தீபம் மூடின கும்பம் போனால்
நீடுமின் னொளியா யெங்கும் நிகழ்ந்தங் காத்து மாவும்
மூடிமுன் மறைந்தி ருந்த மும்மலம் விட்ட போது
நீடுதற் சொருப மாயே நிகழ்ந்துதான் விளங்கு மன்றே. 12

79. பெத்தித்த சாம நீலம் பெத்தம் விட்டாற் பளிங்கு
சுத்தந்தன் னுருவ மாயே சோதியாய் விளங்கி னாற்போல்
தெத்தித்த புரியட் டத்தின் பெத்தத்தை விட்ட போது
சுத்தத்தா னாத்து மாவும் சுபாவமாய் விளங்கு மன்றே. 13

80. அதிகாரி சுத்த நித்த னாத்துமா வென்னி லிந்த
பதிகார குணங்கள் பெத்தம் பற்றுவிட் டிருக்கு மாறென்
விகாரி சுத்த னுண்மை யனாதி சம்பந்த பரசம்ப
விகாரம் பண்ணும் பெத்தம் பாவனா பெத்த மன்றே. 14

81. விளங்கிய சித்தத் தோதான் மேவிய வசுத்தத் தோதான்
களங்கமாங் குணங்க ளென்னிற் கருதிடாத் மாவுக் கில்லை
விளங்கிய விளக்கத் தன்று விளக்கிலே திரியு நெய்யாற்
களங்கமா மைப்பி றப்பக் காண்டல் போற் குணம தன்றே. 15

82. சத்தெனு மமிர்தா னத்தைச் சாந்தத னிச்சை கொண்டு
புத்திமுன் சேட்டித் தத்தாற் போகங்கள் புசிக்கு மாகேள்
சத்தன்றன் சன்ன திக்கே தற்சொருபத்தி னின்று
புத்திதன் சேட்டை யெல்லாம் புருடனங் குதாசி னன்காண். 16

83. செறிதரு கதிரோன் முன்கண் சேட்டையாங் காத்து மாமுன்
னறிதரு புத்தி சேட்டை யத்தினாற் சேட்டை பெற்று
வெறிதரு மாங்கா ரத்தில் விகாரமா மனஞ்சேட் டித்துப்
பொறிகண்மேற் புறக்கண் செல்லப் பொறிகள் சேட்டித்த
[தன்றே. 17

84. சத்தமுன் விடயந் தன்னைச் சமத்தவிந் திரியம் பற்ற
மெத்தன மனமும் வாங்கி விகாரத்திற் கூட வைக்கு
மத்தகு மவைய னைத்து மாங்காரம் வாங்கிக் கொண்டு
புத்தியி னிடத்தே சேர்க்கும் புத்திநிச் சயிக்கு மன்றே. 18

85. இப்படிப் புத்தி தன்னி லெய்தவவ் விடைய மெல்லாந்
தப்பிலா விச்சைதன் னுத்மாச் சன்னிதி யால்வி ளங்கு
மெப்படி விகார மின்றி யாவிழூ தலத்தி லுள்ள
வப்படிப் பொருள்க ளெல்லா மறிவிக்கு மாங்ங னையா. 19

86. முகமெங்கன் காணு நிற்கு முன்வலி தற்ப ணத்தி
லகமங்ஙன் காணும் புத்தி யத்திலே சுதம தர்க்கச்
சகமதில் கொள்ளல் கொள்ளா தொழிகைபா வகந்தா னில்லைச்
சுகமதே வடிவி தான சுரூபமாய் நிற்கு மன்றே. 20

87. அத்தமா யகத்துட் டோன்று மானந்த மாக மற்றும்
வெத்தமே புறக்க ணென்றும் விடயங்கள் பலவு மாகப்
புத்திதன் வசத்தால் ஞானம் பொருந்திடு மசேத னன்றுன்
வத்துவி னிடத்த தாகு மதிக்குமம் மதியு மன்றே. 21

88. பொறிகளால் விடய மெல்லாம் புக்கவை புத்தி தன்னில்
செறிவுறப் பிரகா சிக்கும் சேதனன் சன்ன திக்கே
யறிவுறு மிக்க ஞான மனைத்துமென் செயல தென்னும்
வெறியுறு பிறவிக் கென்றும் வித்ததாய் மேவு மன்றே. 22

89. தானல்லா தொன்று தன்னைத் தானெனக் கருதிக் கொண்டு
நானெல்லாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞான மத்தா
லீனமாம் வினையி ரண்டா மிருவினை யாலு டம்பா
மூனமா முடம்பா லூழா மூழினு லாகா துண்டோ. 23

90. வித்திலே விளைவு தோன்றி விளைவிலே வித்தா மாங்கே
பெத்தமுன் வினைக ளாலே பிறந்திடு முடலி தென்று
மித்தவ வுடலி னுலே மீண்டுமவ் வினைக்கட் டோன்றி
நித்தமா யிடைய றுதே நிகழ்ந்திடு மனாதி யன்றே. 24

91. ஓர்ப்பொடு பசியுந் தாக முற்சாகஞ் சுகதுக் கங்கள்
தார்ப்பரி யங்கள் போகந் தன்மமும் பாவந் தானும்
நீர்ப்பரி தான புத்தி நிகழ்குண மாகு மத்தை
யாரம குணம தென்பா ரயிக்கிய பாவத் தாலே. 25

2. உரைப்ப டாவி காரத் துண்மை சைதன மாத்மாத்
துரைப்படும் விகாரி போலத் தோன்றிடுஞ் சம்பந் தத்தா
விரைப்படா விகாரந் தானே தத்தாத்மா மதிக்கண்
விரைப்படும் விகாரங் காண்பான் மீதசோ கத்தா நின்றே. 26

93. சேர்ந்தவவ் வுருவம் போலத் தெளிதரு பளிங்க தென்ன
வார்ந்தநோய் திரைகள் மூப்பு மருந்துய ரனைத்துங் கொண்டு
சோர்ந்தவச் சரீரத் தாலே சரீரிபோற் றேன்று கின்ரு
லோர்ந்திடி லொன்று மில்லா வுண்மை சைதனத்த தன்றே. 27

94. துன்பொடு பயமி லச்சை சோகமு மோகங் கோபந்
தன்படு தன்மம் பாவஞ் சமத்தமென் செயல தென்கை
யின்பொடு புத்தி கன்ம மிவையென்கை விவேக மென்று
மன்புட னென்ன தென்கை யதுவவி வேக மன்றே. 28

95. அத்தவத் துணரா துள்ள மற்பமே ஞானி யென்பார்
பத்துநா ருயி ரம்பேர் சேதனமெனப் பகரக் கேளாய்
தத்துவ ஞானி யாவார் தற்சொரு பத்தை நாளும்
புத்தியின் மேலே காணும் புண்ணியா ரென்னி லன்றே. 29

96. சித்த நல்லாத் மாவுந் திரிவித மாம்ம லத்தால்
வித்தகன் மலமொன் றுள்ளான் விஞ்ஞான கலனு மென்றும்
பெத்தநன் மலகன் மந்தான் பிரளய காலந் தென்பான்
மத்தமாஞ் சகல னுவான் மலகன்ம மாயை யன்றே. 30

97. பற்றின மலத்த ரென்று பகர்ந்தவுத் தமமி ரண்டாம்
முற்றிய மலத்த ரென்று மூடமா மலத்த ரென்றும்
பற்றிட லாம லத்தா னட்ட விச்சே சார்வார்
மற்றுள்ள மலத்தார் சொல்லில் மந்திர ரேழு கோடி. 31

98. செறிவுறு மலமுங் கன்மஞ் சேர்ந்தமத் திமர்கள் மூன்றில்
அறிவுறு பக்கு வத்தா லடைவர்கள் முத்தி யென்றே
பொறியுறு பிறவி நண்ணும் புரியட்டத் தோடுங் கன்ம
நெறியுறு புவனங் கட்கு நிற்பர்கள் சிலர்கத் தாவாய். 32

99. இருட்டிய சகலர் தம்மில் ஏய்ந்தபக் குவர்க ளெல்லாம்
மருட்டிகள் தேசி கன்றன் அருளினுல் முத்தி சேர்வர்
சிருட்டியி லாதி தன்னில் சிலர்கலை யாதி காலம்
மருட்டநூற் றெருபத் தெண்மர் உருத்திரர் மந்தி ரேசர். 33

100. அருந்துய ரம்மை யூமால் அல்லாத சகல ரெல்லாம்
பொருந்தியே மாயை யின்றன் வசத்தராய்ப் போத மின்றி
வருந்துவர் பறந்து மூர்ந்து மாறிநின் றுழன்று நாளும்
திருந்திய வின்ப முத்தி சேருமவ் வளவு மன்றி. 34

101. நட்பொடு பகைக ளுள்ளா னவக்கிர கங்கள் நண்ணும்
சட்பகைக் குணங்கள் மேவும் தந்தைதாய் மனைவி சாரு
முட்பகை பிணிகள் சேரு மொண்குலங் கல்வி பேணும்
தட்பமும் நாடுங் காடுஞ் சார்ந்திடுங் கன்ம மன்றே. 35

102. உடற்கிறை மயக்க ஞான மூழ்வச் செயல்க ளெல்லாம்
மிடற்படற் றன்னை நாளு மின்பமீ தென்றி ருக்கும்
நடற்படு பெத்த மென்று நண்ணுவா னலமொன் றில்லான்
அடற்படு விகார மாகி அதன்மலங் குணங்க ளீதாம். 36

பசு இலக்கணம் முற்றும்.

## 4. பாச இலக்கணம்

103. சிட்டரா மன்பர் நாளும் செய்தவப் பொருளே ஞான
பட்டனே பரம யோகி பசுத்திற மருளி னற்போல்
விட்டுடற் பிறப்பை யின்ப வீடெய்த வொட்டா தென்றுங்
கட்டிடும் பாச நாமங் காரிய முருவ மென்னே ? 1

104. வளைத்தறி வாத்து மாவின் வடிவினை மறைத்துக் கொண்டே
இளைத்திடும் பிறப்புக் கென்றும் ஏதுவாம் மலமூன் றுகி
முளைத்திட வித்தை பண்ணும் மூக்கொடு தவிடு மிப்போல்
திளைத்திடும் ஆத்து மாவைச் சேர்ந்துமுன் னுதி யன்றே. 2

105. சொன்னமும் மலங்க ளேது சொன்னவவ் வடைவி னலே
மன்னுமுன் னணவந் தானும் மாயைகா மியங்கள் பின்பு
பன்னிலை ஞான மோகம் பரவசம் பண்ணும் மூன்றும்
இன்னமும் இவைதான் செய்யும் காரியம் இயம்பக் கேளாய். 3

106. எறித்திடும் பொருள்மே லிச்சை எனக்கெதி ரியாவ ரென்கை
வெறித்திடு கோபத் தோடே விகற்பநிச் சயமற் றுசை
செறித்திடும் பொறியுட் போகஞ் செறிந்தபே ருவகை யோடும்
குறித்திடுங் குணங்க ளெல்லாம் கூறி லாணவ மதன்றே. 4

107. வெய்யசொல் வெறுப்புச் செய்தல் வியன்குரு மொழிபி ழைத்தல்
செய்ய செய்ந் நன்றி கொன்றல் தீக்குண முடைய னுதல்
பொய்யுரை கொலைதா னேர்தல் புகன்றமா றுற்றுக் கூறல்
மையுறு குணங்க ளெல்லாம் மாயையா மலம தன்றே. 5

108. மயக்கமோ டறிவொன் றின்மை மைதுனங் களவு காண்டல்
பயத்துட னுயிர்த்தம் பண்ணல் பாவமாந் தொழில்கள் செய்தல்
செயற்படுந் தன்கு லத்திற் செய்வன செய்யா னுதல்
வியற்புடைக் காமி கத்தின் வியன்குண மிவையா மன்றே. 6

109. கன்மமு மனுதி யன்றே கலந்திடு வகைக ளான
தன்மமுங் கன்ம மாயே சரித்திடை விடாதே நின்று
முன்வலி காலின் பின்னு முருகென வுயிர்கள் புத்தி
தன்வச மாக்கி நாளுந் தகைந்துடல் கட்டு மன்றே. 7

110. மாலதா மாயை யென்று மன்னியொன் ருக நின்றே
மூலமாய்ச் சகத்துக் கெல்லா மோகமே யுயிர்க்குப் பண்ணுஞ்
சீலமாம் பசுக்க ளுண்மை சேதன வடிவ தெல்லாங்
கோலமா மறைக்கும் பாசங் குணங்களின் றன்மை யீதால். 8

111. பிறப்பதும் பாசத் தாலே பிணிப்பதும் பாசத் தாலே
யிறப்பதும் பாசத் தாலே யிளைப்பதும் பாசத் தாலே
மறப்பதும் பாசத் தாலே மயக்கமும் பாசத் தாலே
துறப்பதும் பாசத் தாலே தொழில்களும் பாசத் தாலே. 9

112. பிணிகளும் பாசத் தாலே பேதனம் பாசத் தாலே
துணிவதும் பாசத் தாலே துன்பமும் பாசத் தாலே
யணிவதும் பாசத் தாலே யாக்கையும் பாசத் தாலே
பணிவதும் பாசத் தாலே பற்றெல்லாம் பாசத் தாலே. 10

பாச இலக்கணம் முற்றும்.

## 5. தத்துவ சிருட்டி

113. கலங்குவன் பிறவிப் பௌவங் கடந்துயர் கரையி லேற்று
நலங்கொள்சே வடியி னுனே நற்றவர் முனிவர் நாதா
மலங்களின் செய்தி யெல்லாம் மாசற வருளி னுப்போல்
சலங்கொள் தத்துவங்கள் தோற்றஞ் சாற்றிநீ யருள வேண்டும். 1

114. சுத்தநற் சிவமு மத்திற் சுபாவசிற் சத்தி யாய
சத்தியின் கிரண மான சத்திதான் முன்பே சொன்னே
மொத்தவை தன்னி னுலே வுலகங்கள் கெற்பித் துள்ள
வித்தக மலமா யாதி தத்துவம் விளம்பக் கேணீ. 2

115. தத்துவஞ் சிவமுஞ் சத்தி சதாசிவ மீசன் வித்தை
நித்தமா மாயை கால நியதிநன் கலையு டன்ருன்
வித்தையு மிராக மாத்மா மேவுமவ் வியங்கு ணம்பின்
புத்தியாங் காரத் தோடும் பொருந்திடு மின்னங் கேளாய். 3

116. நன்மேந் திரியஞ் செவிதோல் நாக்கண் ணுசி
கன்மேந் திரியம் வாய்கை கால் குதத் தோடுபத்தம்
தன்மாத் திரைசத்த மூறொளி யிரத கந்தம்
வன்மா பூதம் வான்கால் வன்னிநீர் மண்டத் துவமே. 4

117. செப்பின தத்து வங்கள் சிவன்முத லவனி யந்தம்
முப்பதோ டாறு நாம மொழிந்தவவ் வடைவி னுலே
யொப்புடை யுதயம் பெத்த முருபகா ரியங்க ளெல்லா
மிப்படி யிருக்கு மன்றே யெடுத்தினி யியம்ப லுற்ரும். 5

118. இடம்படு வியாப மேக மேய்விடம் நித்த சுத்தஞ்
சடம்படு தத்து வங்கள் சகலகா ரணங்க ளாகு
முடம்படு முயிர்கட் கெல்லா முணர்வொடு தொழிலுண்டாக்
செடம்பொருள் சிவமென் றென்றுஞ் சிவத்தின்றத் துவமி [குஞ்
[தன்றே. 6

119. சத்துநற் சிவவி சார சத்திகள் திட்டாந் தத்திற்
சித்துநற் சிவம தென்பர் சிலர்சிவ தத்து வத்தைச்
சுத்தமா மனத்தி னாலே தோற்றமு மனாதி யாய
வத்தொழில் செய்த லாலு மருளுமுண் டென்ப ரன்றே. 7

120. எரியது சேர்வித் தாங்கே யிருஞ்சிவன் சேர்ந்த தெல்லாஞ்
திரியவும் பிறவா தாகுஞ் செகமெலாஞ் சென்றொ டுங்கி
விரியுமவ் விடம்வே றாக வேண்டுது மதுமா மாயை
தெரிவுறு நல்லோ ரித்தைச் சிவத்தின் றத்துவம தென்பர். 8

121. முந்தித்தான் சிவதத்து வத்தில் முழுதுல குற்ப விக்கச்
சந்தித்த தியாது செப்பிற் சத்திதத் துவம தாகு
முந்தித்தான் ஞான சத்தி யொக்கவே கிரியா சத்தி
சந்தித்த விடத்திற் சத்தி சதாசிவ தத்து வங்காண். 9

122. அற்பமா ஞான சத்தி யதின்மிகக் கிரியை தன்னி
லுற்பவச் செயலை யீச தத்துவ மெனவு ரைப்பா
ரற்பமாய்க் கிரியா சத்தி யதற்குமேல் மிக்க ஞானத்
துற்பவ மாமவ் வித்தியா தத்துவ முரைக்கி லன்றே. 10

123. சார்ந்தனன் விந்து நாதஞ் சதாசிவ தத்து வத்தின்
னேர்ந்தன ரந்த ராதி யீசதத் துவத்தி னன்றே
சேர்ந்தனர் சுத்த வித்தை செறிந்தமந் திரமேழ் கோடி
யார்ந்தன வுயிர்கட் கெல்லா மருள்புரி கார ணத்தால். 11

124. சித்திரித் துலகம் பண்ணாச் சிவதத்து வத்துதித்த
வெத்திறத் திச்சை யாதி சத்திக ளேற்றத் தாழ்வு
வித்திரித் துதித்த வற்றின் வியா பார போதமாய
சுத்ததத் துவமிவ் வைந்துந் தோற்றமும் பிற்பா டில்லை. 12

125. சுத்தமா மாயை தன்பால் தோன்றின பேதஞ் சொன்னோ
மத்தமா மாயை தன்பால் மற்றுள்ள தத்து வங்க
ளத்தனே யிரண்டோ மாயை யன்றுகா ணவத்தா பேத
மெத்தன்மை தற்ப ணத்தி னிருபுறம் போலு மன்றே. 13

126. ஏகாந்த னறிதற் கொண்ணா தெங்குநின் றனித்த மன்று
போகங்கள் பிறப்பிக்கின்ற புவனகா ரணம தாகு
மாகந்தோ யுயிர்கட் கெல்லா மவ்வவ வினைக்குத் தக்க
மோகங்கள் பிறக்கப் பண்ணு மோகினி யென்னு மாயை. 14

127. மூலத்தி னின்றுங் கால மூன்றுமே யுருவ மாகி
யேலத்தான் காலஞ் சத்தி யாவையின் மயமாய்த் தோன்றி
காலத்தின் வசத்தி னாலே கலித்ததிவ் வகில மென்றே
சீலத்தி னாலே யத்தைச் செப்பினாற் கால மென்றே. 15

128. கனந்தரு மாயை யன்று காலதத்து வத்தின் பின்னே
யனந்தரந் தோன்றி யாதொன் றகிலமுன் செய்த தன்றங்
கினந்தொறு நியம மேதன் வடிவமா யிருக்கு மத்தை
மனந்திகழ் நல்லோ ரெல்லா மதித்தன நியதி யன்றே. 16

129. படர்ந்துள மாயை நின்றும் பகர்ந்தவந் நியதி பின்பாய்
அடைந்துள மலத்தி னாலே யறிவிலாத் மானுக் கத்தைக்
கடைந்தொரு விடத்தை நீக்கிக் கத்திரு சத்தி காட்டி
யுடன்றிக முறிவா மத்தை யுரைத்தனர் கலைய தன்றே. 17

130. பின்கலை பிறந்த தென்னும் பேசிய நியதி கால
முன்கலை யாத்மா வுக்கு மொழிந்திடில் வினியோ கத்தில்
நன்கலை யறிவி னாலே நானில மந்த மாகத்
தன்செயல் யாவுஞ் செய்யுஞ் சகலதத் துவங்க ளன்றே. 18

131. தூண்டிய யறிவி னோடுந் தொழிலுடைப் புமான்றன் விடையங்
காண்டகு நிமித்த மாகக் கலையது பெற்ற வித்தை
யீண்டிய மலத்தை நீக்கி யாவையுந் தெரிசிப் பிக்க
வேண்டுநற் கரண மாகும் வித்தையென் றறிக வென்றே. 19

132. சத்துநற் புமான் விடையஞ் சகலமுந் தெரிசிப் பிக்கை
யொத்தநற் கரண மென்றே யுரைத்தது வித்தை தன்னைப்
புத்தியுஞ் செய்யு மென்னிற் புமான்வி டயம்பு சிக்கு
மத்திசைக் கரணம் புத்தி யந்தக் கரண மவித்தை. 20

133. தெரிந்தவல் விடைய மேலே சேதனன் றனக்கு நேசம்
பரிந்துமுன் பண்ணு மித்தைப் பகர்ந்தன ரிராக மென்றே
விரிந்தவவ் விடையஞ் செய்யில் விகாரத் தரையுங் கண்டோம்
புரிந்திடும் புத்தி யாமேற் புறம்பதி துள்ளு மன்றே. 21

134. தத்துவ மனைத்துஞ் சார்ந்து சகலபோ கங்க டன்னை
மத்தனுய் நுகரும் போது மதித்தனர் பசுவ தன்றே
சுத்தனு மாத்து மாவுந் தோய்தலா லுடலோ டெண்ணிப்
பெத்தனுய்ப் புருட னென்றும் பேர்சொல்லப் படுவ தன்றே. 22

135. மத்தவவ் வியத்தந் தன்னை மதித்திடிற் குணங்கள் மூன்று
மொத்தன வுருவ மத்தை யுரைப்பரவ் வியத்த மென்று
பெத்தம துயிர்க்கி ருப்புப் பிரகிருதிதான் பேதித் தக்காற்
சத்துக மிராச தம்பின் தாமத மென்ன மூன்றும். 23

136. இரண்டெனத் தத்து வத்தோ டெண்ணினுங் குணங்கள் மூன்றுந்
திரண்டவவ் வியத்த மத்தின் செயல்கள்காண் குணங்கள்
விரண்டுமொன் றுகு மத்தி லேகமே தத்து வத்துட் [சொல்லி
டிரண்டவவ் வியத்தந் தன்னின் திரிகுணஞ் செயல்கள்
[கேளாய். 24

137. துலங்குமவ் வுயிர்க ளுக்குத் தோற்றமு நிலையுந் தம்மில்
இலங்குமுக் குணங்கள் செய்யு மென்றுகொள் சொல்லி லன்றே
நலங்கொளுஞ் சாத்து வீகம் ஞானமா மிராச தந்தான்
சலங்கொளக் கோப மாகுந் தாமத மஞ்ஞா னங்காண். 25

138. சிட்டநல் லறிவு சாந்தஞ் சிருட்டியோ டின்ப மற்றுஞ்
சட்டென வீதல் தன்மந் தயாவிவை சாத்து வீகம்
வெட்டென வுரைத்த லாசை வியாபாரங் கீர்த்திபேணல்
கிட்டிடுங் கோபத் தோடுங் கிராகத மிராச தங்காண். 26

139. பழித்துரை நியமத் துன்பம் படைத்தவப் பொருள்க டன்னை
யழித்தலோ ரேக்கஞ் சோம்பு மாயவன் தாம தங்காண்
கொழித்துமுக் குணமொன் றென்றிற் கூடுறு மூன்ற தாகித்
கழித்திடுங் கலந்து மாறிக் கணத்தினிற் பங்க மாயே. 27

140. அடையமுக் குணத்திற் றேன்றி யலந்தெழு புத்தி தானு
முடையதாக் குணங்க ளுக்கிங் குரைத்துள செயல்க ளெல்லாம்
விடையநிச் சயமும் பண்ணி மேவுவித் திடும வற்றைப்
படை கொள்முற் கன்மத் தாலே யென்றுகொள் பரிந்து நீயே.28

141. ஆத்தவிப் புத்திக் கண்ணின் றுங்காரந் தோன்றித் தானு
மூத்தமுக் குணவ சத்தால் மூன்றுபே தங்க ளாகுஞ்
சாத்துவாங் கார மென்றுந் தாமதாங் கார மென்று
மேத்துவ விரண்டின் றேன்று மிராசதாங் கார மன்றே. 29

142. சிறந்தனற் சைத னன்றுன் செறிந்தவாங் காரந் தன்னில்
பிறந்தநன் மனமும் புத்தி பிணித்தவிந் திரிய மைந்தும்
நிறந்தரு மவைகா ரிக னிகழ்ந்தவாங் காரந் தன்னில்
மறந்தரு கன்மேந் திரிய மதித்தவை பிறந்த தன்றே. 30

143. தாங்குபூ தாதிக் கப்பேர் தரித்தவாங் காரந் தன்னி
லோங்குமாத் திரைக ளைந்து முதித்தன வென்று கொள்க
வாங்குமாத் திரையி லொவ்வொன் றடைவடை வேற்றங்
நீங்குவ னுதி பூதம் நேர்ந்தவை பிறந்த தன்றே. [கொண்டு
31

144\. குணங்களிற் றேன்றும் புத்தி கோதில்சே தனனுற் மாற்கு
வணங்கிவா கனமாம் போக மருவிப்போய் நுகரும் போதி
னிணங்கிடும் விடய மெல்லா மின்னதீ தின்ன தென்றே
பிணங்கிடா வகைய வற்றின் பேர்கள்நிச் சயிக்கு மன்றே. 32

145\. வித்தகப் புமான்முன் புத்தி வெய்யவன் முன்கண் சேட்டை
யத்தன்மை யென்னச் சேட்டித் தத்தங்கள் தெரிசிப் பிக்கும்
புத்திதன் வசத்த தாகும் போகமும் புசித்த றுனும்
பெத்தமும் பெத்த வீடும் பிணிப்பது புத்தி யாலே. 33

146\. உயர்ந்துளே னுலகி னுனே யொப்பெனக் காரோ வென்றும்
பயந்துநோக் காங்கா ரம்போற் பாசமற் றென்று மில்லை
யியம்பலாங் காரந் தானு மென்றுண்டன் றளவுஞ் செல்லச்
சயம்புமெய்ஞ் ஞானஞ் சாரா யென்றுகொள சாற்றி லன்றே. 34

147\. இந்திரி யங்கள் சேட்டைக் கிறையதா மனவி கற்பம்
தந்திரிப் பிறவி மூலஞ் சங்கமா மிச்சா ரூபம்
மந்திரத் தலைவன் முத்தி மனவச மாகில் நண்ணும்
அந்தரப் பிறவி யெய்து மவ்வச மாகி லன்றே. 35

148\. சோத்திர மோசை கேட்குந் தொக்குறும் பரிசங் கண்டான்
பார்த்திடு முருவந் தாலுப் பரிந்துணு மிரத நாசி
சேர்த்திடும் வாசந் தன்னைச் செப்பின விந்த வைந்து
மாத்திர பஞ்ச கத்தின் வடிவுணர் கருவி யன்றே. 36

149\. வசித்திடும் வாக்குத் தான மலர்க்கைகள் கெமனம் பாதம்
பசித்துணு மவற்றைப் போக்கும் பாயு ருபத்தா னந்தம்
புசித்திட விடமா காசம் பொருந்திடத் திரட்டுங் கால்தீ
நசித்திடும் பிடிக்கு நீராம் நானிலந் தாங்கு மன்றே. 37

150\. இலங்குவான் வட்ட ரூப மிருமூன்று கோணம் வாயுச்
சலங்கொள்தீ மூன்று கோணந் தண்மதிப் பாதி போல்நீர்
நலங் கொள்பார் சதுர நான்கா நானில மந்த மாக
புலங்கொள்வா னுதி யாய பூதங்க ளுருவி தன்றே. 38

151\. விரியும்வான் றூமம் போலு வீசுங்கால் கறுப்ப தாகு
மெரியுந்தீ யிரத்தம் போன்று மிரங்குநீர் நீலம் போலுந்
தெரியும்பா ரதுதா னேயாச் சிறந்தசெம் பொன்னி னுங்கே
பெரியவைம் பூதங் கட்குப் பேசுங்கா லிவையே வண்ணம். 39

152\. ஏயும் வான்தனக் ககாரம் வகாரமாம் வாயு வுக்குக்
காயும் வெந்தீச் சிகாரங் கலந்தநீர் மகார மாகுந்
தோயுமா நிலத்துக் கொன்றுஞ் சொல்லிடில் நகார மாகு
மாயுமையும் பூதங் கட்கு மக்கர மமைவி தானே. 40

153. வானினிற் சதாசி வன்ருன் வாயுவில் மயேச ஞகு
மூனமி லுருத்தி ரன்தீக் கோங்குமா லிருநீர்க் கென்றிப்
பூவினில் நான்மு கத்தோனையா பூதங்க ளைந்தினுக்கு
மானவிவ் வைந்து மூர்த்தி யதுதெய்வ மாகு மன்றே. 41

154. விந்துவி னின்று மாலம் வித்தென விரிந்தாங் காத்மாத்
தந்தம் வல்வினை புசித்த தனுகர ணங்க ளாகி
யந்தர மண்ட மெண்டிக் காயதத் துவங்க ளெல்லாம்
வந்தவிவ் வடைவி னுற்போய் மாயையி னடங்கு மன்றே. 42

155. அடங்கிடு மாயை தன்னி லாத்மா வனைத்துஞ் சென்றே
யிடங்கொளு மாயை யாத்மா யிருஞ்சிவ மென்று முண்டு
மடங்குவார் வினைக ளொத்தார் மாசிலா முத்தி தன்னிற்
றுடங்கிமுன் போலுன் மத்தர் தோன்றுவர் பிறப்பி லன்றே. 43

156. மன்னிடு மலங்கள் கன்ம மாயையாம் பாச மூன்றும்
பன்னிடும் பசுவைப் பாசம் பந்திக்கப் பண்ணுஞ் சத்தி
தன்னுடன் பாச நான்காந் தற்பவ பரிணு மத்தா
லுன்னிடுந் தத்து வங்க ளொன்றுடன் பாச மைந்தாம். 44

தத்துவ சிருட்டி முற்றும்.

## 6. வீடு பற்று

157. தேர்ந்தனன் பரம மாய சிவனுதா சனனுய் நிற்க
வார்ந்தமெய்ஞ் ஞான சத்தி யத்துட னசத்தா மாயை
சார்ந்துநல் லகிலம் பெற்ற தன்மைநீ யருளி னுப்போல்
வேந்தனே யுயிர்கள் காயம் விட்டவை பற்று மாறென். 1

158. தாயையா ரறியார் மற்றுந் தந்தையா ரறியார் தாமே
போயையார் புக்குப் பற்றும் புதல்வரு மறியா ரன்றே
மாயையார் செய்தி யெல்லாம் மயக்கமா யிருக்கு மன்றே
காயையைக் கருத்துத் தன்னைக் கருத்தினுற் பிறப்ப தன்றே. 2

159. திருத்தமா மலர்போய்த் தெங்கே சென்றவவ் மணம்போ
[லங்கே
கருத்துத்தான் போமி டத்தே கட்டும்போய்ச் சீவ னன்றே
பொருத்தமா முடலை விட்டு புரியட்ட கத்தி ேனுடும்
வருத்தமே பண்ணு முன்னை வல்வினை வசத்தா லன்றே. 3

160. சத்தமும் பரிசந் தானுஞ் சார்ந்தொளி யிரத கந்தம்
புத்தியும் மனமாங் காரம் புரியட்ட மாகு மன்றே
யொத்தவிச் சூக்கு மத்தோ டூழ்வசத்தி யோனி புக்குப்
பெத்தமாந் தூலங் கொண்டு பிறந்திடா நிற்கு மன்றே. 4

161 விட்டிடுந் தேகஞ் செய்த வினைதனக் களவிற் சென்று
கட்டிடுங் காயந் தன்முன் கனவுபோற் புணரக் கண்டு
விட்டிடுங் கருத்தங் குற்று வினையுடன் காலங் கூடிக்
கட்டிடும் பாத்தி ரத்தே காரண நீடு மாயை. 5

162. ஒருவன்செய் மாயை யாலே யூழ்வசத்தி யோனி புக்குக்
கருவங்குப் பாயு மாறுங் கட்டாண்பெண் ணலியா மாறும்
பொருமந்தக் குணமா மாறும் பொருந்தவை யவங்கள் வண்ணம்
வருவன வாழு நாளும் வளற்றியு மியம்ப லுற்றும். 6

163. தோயு முன்னுடலை விட்டுச் சூக்குமத்தோடுங் கூட
வாயு வாகனனுய்த் தந்தை வாயுவி னேடுங் கூடிப்
பாயு மாதா விடத்தே பாய்ந்தபின் பாச யத்தி
லேயுமவ் விருநீர் மெய்யா யிட்டவித் தெழுந்தாங் கன்றே. 7

164. தந்தைதன் வலத்தே வாயுச் சரிக்கச் சுக்கிலமு மிக்காற்
சுந்தர வானுந் தந்தை வாயுவு மிடத்தே தோன்றிக்
கந்தமா ரிரத்த மிக்காற் கருதுபெண் ணிருநீ ரொத்து
வந்திடி லலியாந் தந்தை வாயுவு மிருபாற் றோன்றில். 8

165. தோன்றிடும் வாயுத் தந்தை தொக்குட லெங்கும் புக்குத்
தோன்றிடி லவய வங்கள் தோன்றிடும் பிள்ளை பாலுந்
தோன்றிடும் வாயுப் புக்குத் தோன்றிடா தவய வங்கள்
தோன்றிடும் பிள்ளை பாலுந் தோன்றிடா தென்றுகொள்க. 9

166. என்றவிவ் வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கக்
சென்றிடும் போது வந்த சிறுவனும் வயது நூறும்
அன்றியவ் வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கிப்
பொன்றிடும் போது வந்த புதல்வனும் போகு மன்றே. 10

167. அக்கணிற் றந்தை வாயு வைந்துபூ தத்தின் மாறிப்
புக்கிடு பூத வண்ண மாயிடும் புதல்வற் கென்றும்
முக்குணந் தன்னில் மாறி முயங்கிடுந் தந்தைக் கப்போ
தெக்குண முதிக்கும் பிள்ளைக் கக்குணம் விதிய தன்றே. 11

168. விட்டவவ் வுடலாற் செய்த வினைக்குடல் பிதாவாற் பெற்றும்
மட்டவி ணெறிமென் கூந்தல் மாதாவி னுதரம் புக்குக்
கட்டிய கெற்பந் தோறிக் கரும்புன்னை வெண்முத் தன்ன
மொட்டலர் பவளம் போலு முதனுளென் றறிக வென்றே. 12

169. நீருறு குமிழி போல நிரம்புமஞ் சாநா ளண்டச்
சீருறு பதினைஞ் சாநாள் சிரந்தோன்றுந் திங்க ளொன்றில்
மார்புறுந் தோளுந் தோன்று மிரண்டினில் வயிறு மூன்றில்
பேருறு தாளி ரண்டும் பிறந்திடு நாலா மாதம். 13

170. மாதமைந் துக்கு ளெல்லா மவையவம் வகுத்துப் பின்னே
யேதுமி லாமை யின்றன் பிண்டம்போன் றிருக்கு மாறில்
சேதமொன் றின்றி யென்பு சிக்கெனு மேழா மாதம்
போதவும் படுமு ரோம மிரத்தமும் பொருந்தி யாங்கே. 14

171. ஆனபி னெட்டா மாத மாக்கையி னூக்கம் போதந்
தானுமுண் டாகிப் பின்னை நவதிங்கள் சார்ந்த போது
ஞானமு மிக்குத் தோற்ற நன்னிலை யிறுதி யோர்ந்தே
யூனமாங் கெற்பத் துன்ப முணர்ந்திட வுற்ற தன்றே. 15

172. உற்றெரி கொளுநீ ருற்ற வாமைபோ லுதரத் தீயு
ளெற்றுறுந் துன்ப மாற்றே னென்றிரு நொந்தும்
மற்றினிப் பிறவா வண்ணம் மாற்றிடெம் மிறைவா வென்று
தற்சொரு பத்தை நோக்கித் தாய்வீணு தண்டைச் சாரும். 16

173. சார்ந்ததவ் வளவிற் பத்தா மாதமாய்த் தாயா ரீன்று
போந்தமெய் வருத்தத் தால்முன் பொருந்திய ஞானம் விட்டுச்
சோர்ந்துபா ரதன்மேல் வீழ்ந்து தொடரவும் பசிதா கத்தால்
மாந்தனுய் வருந்தி நாளும் வல்வினைக் குழலு மன்றே. 17

வீடுபற்று முற்றும்

## 7. அவத்தாலக்கணம்

174. நீடுமா விருளுக் கென்று நிறைந்தசெங் கதிரோன் போல
மூடமாம் பாசந் தீர்க்க முத்தியைத் தரித்துள் ளோனே
வீடுபற் றருளி னுற்போல் மேவிய காயந் தன்னில்
கூடுமவ் வவத்தை தன்னைக் கொள்ளுமா றருள வேண்டும். 1

175. அறிவுடன் சாக்கி ரந்தா னனைத்துடன் முகத்தி னின்றே
பொறிகளிற் சொற்ப னம்பின் பொருந்திடு மிருத யந்தஞ்
செறிவுறு நாபி யந்தஞ் செப்பிடிற் சுழுத்தி தன்கீழ்
நெறியுறுந் துரிய நிற்கு மிலிங்கத்திற் றுரியா தீதம். 2

176. சத்தமுன் விடயம் பத்துஞ் சரித்திடும் பொறிகள் பத்தும்
பத்துவா யுக்க ளோடும் பகர்ந்திடிற் கரண நான்கு
மெத்திறத் திவற்றின் சேட்டைக் கேதுவாய் முகத்தி னிற்கு
மத்திசை புசித்தா னென்பர் அவத்தைசாக் கிரம தன்றே. 3

177. ஒழிந்திடப் பொறிகள் பத்து மொழியாது மற்ற னைத்தோ
டிழிந்துகண் டந்து டங்கி யிருதயத் தளவு நின்று
கழிந்துமுன் செயல்க ளெல்லாங் கருத்தினிற் பிரதிபா திக்க
மொழிந்திடுங் கனவு கண்டே னெனுமுகத் துணர்வு நின்றே. 4

178. ஏயுறு சுழுத்தி நாபி யிருதயத் திடையே நின்று
வாயுவின் சித்தத் தோடே மன்னிடும் புருடன் சித்த
மாயுமுன் கனவை யுன்னி யறிந்திலே னென்னு மாங்கே
யோயுமற் றியாவும் வாயு வொன்றுடன் றுரியஞ் சாரும். 5

179. எரியினைச் சேர்ந்த போதவ் விரும்பெரி யாகு மாங்கே
விரியுநற் சேத னன்றான் மேவினால் மனாதி யெல்லாந்
திரியவவ் வெரியை நீங்கச் செடமதா மிரும்பு போலத்
துரியமற் றறிவ டங்கச் சுழுத்தியோ டனைத்துந் தோன்றான். 6

180. உறப்பட்ட விலிங்க முந்திக் குள்ளது துரியம் வந்து
பிறப்பொடு சுகதுக் காதிப் பெரும்பாரஞ் சுமந்த சித்த
மறப்பெய்தித் துரியந் தன்னில் வாயுவு நிற்கப் போதஞ்
சிறப்புடை யிலிங்கத் தானஞ் சேர்ந்தனன் றுரியா தீதம். 7

181. சித்தமில் துரியந் தன்னில் சேதனன் றானே தானும்
வத்துசற் பாவ முண்டாம் வற்றவன் றுரியா தீதம்
மத்தனே துரியாதீத மானந்த ரூப மாய
சுத்தமா மவத்தை யென்றுந் தோன்றிடும் பிறப்பி றுதீ. 8

182. என்வடி விதுவென் றெண்ணி யின்பத்தின் வடிவு காணான்
றன்வடி விருளா மாயை தனையது மறைத்த லாலே
யென்வடி வறிவா யத்தா லெப்பொறி கரணங் காணுந்
தன்வடி வதனைப் பின்பு தான்கண்டி டாத தென்னே. 9

183. தன்னைத்தான் காணாக் கண்கள் தானெல்லாங் காண நின்றுந்
தன்னைப்பின் தர்ப்ப ணத்தின் தான்கண்டு கொள்ளு மாப்
தன்னைத்தான் காணா னாத்மாச் சற்குரு நாதன் காட்டத் [போல்
தன்னைத்தான் காணும் பின்பு சாராது பிறப்புத் தானே. 10

184. சொற்படு சாக்கி ராதி தொடங்கிமுன் னொடுங்கி லாத்மா
முற்சட்ட வியாபி யென்னும் மொழிவுடன் மலைவா மென்னிற்
சிற்படு முரும றைத்த திரிமலம் பின்பு நீக்கி
யற்பமோ ரிடத்திற் கூட்டு மறிவினுக் கவத்தை யன்றே. 11

185. அடுத்திட வேண்டு வானே னறிவுக்கு விரிவொ டுக்கம்
மடுத்துள பிரகிருதி சூழ்ந்த பாவகங் காணேன் போல
வடுத்தவ் வவைதா னாகு மமலநற் பளிங்கு போல
வடுத்தமுக் குணங்க ளாலே அறிவுபே திக்கு மன்றே. 12

186. அறிவுறு சாத்து வீக மடுத்துப்பின் சாக்கி ரந்தான்
செறிவுற்றங் கிராசி தந்தான் செனித்திடுங் கனா விரண்டு
மறிவதிற் றாம தம்வந் தடுத்தபின் துரிய மாகும்
செறிதரு துரியா தீதம் திரிகுண வசம தன்றே. 13

187. போதமும் போதா போதம் போதமி லாமை மூன்றும்
பேதமும் பேதா பேதம் பிரகிருதிக் குணமா மன்றே
போதமாஞ் சாத்து வீக மிராசதம் போதா போதம்
போதமில் தாம தந்தான் பிழம்புடை போத மாமே. 14

188. விடமதுக் கடங்கிப் போதம் விரிந்திடு மமுதுக் காங்கே
சடமுடை யுறக்க மாய தாமதத் தறிவ டங்கிச்
சடமதிற் சாத்து வீகஞ் சனித்தபி னெழுந்தி ருக்கும்
விடமுடை யறிஞன் கொள்க இப்படி யவத்தை யையா. 15

189. விரிதரு கதிரோன் மேக மிடைந்தபின் மறைந்தாங் காகித்
தெரியவு மவைதா னீங்கத் தெரிதரு மாறு போல
விரிதரு சேத னற்கு விரிவுட னொடுக்க முண்டோ
திரிகுண விவகார மேகாண் செப்பிடி லவத்தை யெல்லாம். 16

190. மத்தமவ் வியத்திற் றோன்றும் மாயநித் திரையா யுள்ள
சத்திதன் புத்தி யாதி சமத்தமு மடர்த்த போது
வொத்தநற் சைத னன்றா னொடுங்கினா னென்னத் தோன்று
மத்தன்மை யல்லால் மற்றோ ரவத்தைக ளவனுக் குண்டோ. 17

அவத்தாலக்கணம் முற்றும்.

## 8. முத்திசித்தியிலக்கணம்

191. எண்டிசை போக்கு மெல்லா மின்பவீ டெங்ஙன னென்னிற்
மண்டுசர்க் கரைசெல் பால்நெய் கனிகளின் சுவையே னென்றா
லுண்டுபார்த் திடுமி னென்றாங் குரைப்பதன் றுன்பால் நீயே
கண்டனு பவிப்ப தேகாண் காட்டுவோ மஞ்ச வேண்டாம். 1

192. முத்திதன் சித்தி தன்னை மொழிவர்கள் சிலர்வெவ் வேறே
சித்தமற் றாலா மென்றுந் தீவினை சிதைந்தா லென்று
மொத்தநல் லியோகா லென்று முபாயஞா னத்தா லென்று
மத்தன்மை யனைத்து மாகா வீச னருளினா லாகு முத்தி. 2

193. பற்றின வினைகள் விட்டாற் பரமா முத்தி யென்னி
லுற்றுட லிருத்த லாலே யுணவொடு தொழில்க ளுண்டாம்
பற்றிடும் வினைய வற்றால் பற்றுமல் விலக்கி னாலு
முற்ற வாணவ மிருக்க வொன்றாது முத்தி தானே. 3

194. திருத்தமா முத்தி யின்பஞ் செறிதருங் கருத்தற் றாலே
கருத்தரு துடலி ருக்கக் கருத்ததி லிருளே மூடும்
திருத்தமா மின்ப முத்தி சிவனரு ளாலே யன்றிக்
கருத்தினாற் கூடா தாகு மென்றுகொள் கருத்து நீயே. 4

195. துரியத்தைச் சாக்கி ரத்தே துரிசறப் பார்க்க வந்தச்
துரியத்துச் சரீர முத்தி தோன்றிடு மென்னிற் கேளாய்
துரியமா மென்று மென்றுந் தொல்பிறப் பொழியாப் பானேன்
துரியம மிருளா மின்பச் சொருபமாம் சிவன்றன் மேனி. 5

196. சினத்திருங் கடலெ ழுந்து செகங்கொள் மாத்திரைகள் போலும்
மனத்தினிற் சஞ்ச லத்தை மாற்றி டாதியோக மீந்தாற்
சினத்தெழ வெதிரி பீருச் செய்வனோ வாயு தத்தாற்
மனத்தினிற் சுத்தி யில்லேல் வருஞ்சல மியோக மெங்கே. 6

197. அத்தத்துட் பிடித்து வைத்து அசுத்தத்தைப் புறங்கை நீராற்
சுத்தத்தைப் பண்ணு மாங்கே துற்றுள்ளு மலமி ருக்கச்
சித்தத்தால் யோகஞ் செய்தாற் சிறந்தவை பலிக்க மாட்டா
பெத்தத்தை யருதே யோக மீய்கைதான் பிழையா மையா. 7

198. வடித்துள கிளியே போல வகுத்தசில் லறிவு கொண்டு
படிக்கிற சொற்க ளாலே பறியுமோ மலங்கள் மூடி
முடித்தமொய் யிருள்போ மாங்கே மொய்த்தசெங் கதிரோன்
[தோன்ற
வடுத்தமுப் பாச பெத்த மறுஞ்சிவ னாச்சி னைக்கி னைக்கே. 8

199. எஞ்ஞான மந்தி ரங்கள் யோகங்க ளுபாய மெல்லாம்
மெஞ்ஞான மாவ தென்றும் விமலமாஞ் சித்தற் கேகாண்
செஞ்ஞானக் கடைக்கண் வைத்த தேசிகன் சித்த மத்தி
லஞ்ஞானம் பறித்த போதே யமுதவீ டதுவுந் தோன்றும். 9

200. சிறந்தநற் றீட்சை பண்ணுந் தேசிய ரிலக்க ணங்கள்
பிறந்திடும் பக்கு வத்தாற் சிசுக்களைப் பேணு மாப்போல்
சிறந்தநற் றீட்சை யத்தின் செய்தொழி லத்து வாக்கள்
பிறந்திடும் மற்றி யாவும் பிழம்பற வுரைக்க லுற்றும். 10

முத்திசித்தியிலக்கணம் முற்றும்.

## 9. ஆசாரியலக்கணம்

201. வேதிய ராதி நான்காம் வேறுமா மனிலோ மத்தாற்
சாதிதான் சொல்லி நிற்கச் சடகன்மா ராகி லுங்கேள்
கோதிலா ஞான மில்லேற் குருவல்லன் பாச பெத்தஞ்
சேதியா வீட்டைக் காட்டுந் தெளிவில னாகி லன்றே. 1

202. இறையெங்ங னாக மத்தி லிதந்தொறு நாலு பாத
முறையினா லருளிச் செய்த மொழிவழி யந்த னான்கு
நிறையுற நல்கு ஞான நிட்டன்காண் சிட்டற் கென்றுங்
கறையுறு பிறப்ப றுக்குங் கண்ணுடைக் கடவு ளாவான். 2

203. ஆர்த்தது பிறப்பை யென்று மஞ்ஞான பாச மத்தைக்
கூர்த்தமெய்ஞ் ஞான வாளைக் கொண்டுசே திக்க வேண்டு
மேத்திநீ ஞான வாளை யெய்தவ னுருட்க ளாலே
பார்த்தபின் நில்லா பெத்தம் பருதிமுன் னிருள்போ லன்றே. 3

204. விடத்தினல் மூர்ச்சித் தானை விடம்வல்லான் பார்க்கத் தீரு
மடர்த்தலா ரெல்லாம் பார்த்து மதுதீரா வாறு போல
விடத்தினை யுடைய ஞானத் திறைவனுர் பார்க்கி லல்லாற்
சடத்துவ மாயை செய்த சழக்குடைப் பிறப்ப றுதே. 4

205. ஞானமில் குருவைச் சேர்ந்தால் ஞானமுண் டாவ தெங்ஙன்
போனகந் தனக்கொன் றில்லான் புகுந்தவற் கீவ தெத்தை
யீனமில் ஞான வான்ற னிணையடி பணியி லல்லா
லூனமில் முத்தி யுண்டோ வொழியுமோ பிறப்பி றப்பே. 5

206. விட்டுவிட் டொன்றே டொன்று விரைமலர் தேடி வண்டு
மட்டுமட் டுண்டு தான்பின் மகிழ்தல்போற் குருக்க டம்மை
விட்டுவிட் டாயி னும்போய் வியன்குரு மேவா னந்தம்
மட்டுமட் டுண்டு நீயுள் வடிவுகாண் பளவு மன்றே. 6

207. ஒப்பிலா மேரு வாமோ வுலகத்தின் மலைக ளெல்லா
மப்புறங் கங்கை யாமோ வல்லாத பல்லா றெல்லாம்
செப்பில்மா தேவ ராமோ தெருவெல்லாங் குருக்கள் கூடித்
தப்பிலாச் சீவ முத்தி தரும்பர குருவா வாரோ. 7

208. உற்றுமுன் னரசைச் சேர்தல் லொலிகடல் வங்க மோடல்
மற்றுமந் திரவா தந்தான் மகாபலங் கொடுத்தல் கோறல்
குற்றமுங் குணமு மங்ஙன் குருபாதம் வணக்க மின்பம்
முற்றிடும் வழுவி லென்று முழுநர காக்கு மன்றே. 8

209. பிறந்திடக் கடைந்த வெண்ணெய் பின்புமோர் தன்னைக் கூடிச்
செறிந்திடா வாறு போலத் தேகமுந் தேகி தானும்
பிறிந்திடப் பார்த்த பின்பு பெத்தத்துள் நிற்பி னுங்கேள்
செறிந்திடா வாறு செய்யுந் தேசிகன் தேசி கன்றுன். 9

210. அடங்குதீக் கடைந்த போது காட்ட மாகரித்தல் போல
உடங்கிமுன் கிடந்த சீவ னுணர்ந்துபின் பெழுந்தி ருந்து
கடங்கொளுங் காயந் தன்னிற் கருதிய விவற்றை யெல்லாந்
திடங்கொளக் கடைக்கண் வைக்குந் தேசிகன் தேசிகன்றுன். 10

211. பற்றிமுன் பெழுந்த செந்தீப் பரந்தகா னகம்போற் பற்றச்
செற்றையை ஞானத் தீயாற் தெத்தச்செய் தின்ப வீரம்
முற்றும்வந் துடற்க ணின்று முளைத்திடக் கடைக்க ணேக்கிச்
செற்றவன் றுன்பந் தன்னைத் தேசிகன் தேசி கன்றுன். 11

212. முற்றின துரித்துக் காச முப்பிணி யுடம்ப றிந்தே
மற்றவை தனக்குத் தக்க மருந்தினுற் றீர்ப்ப வன்போல்
பற்றின பிறவிப் பாசப் பக்குவ மறிந்த வற்றை
யற்றிட யருட்க ணுேக்கு மவன்பர குருவா மன்றே. 12

213. உரத்தின்கண் பிறவித் துன்ப மொழிந்துமே லின்ப மாய
பரத்தின்கண் ணின்ருர் தாம்போல் பாவித்து ணிமித்த மாக
மரத்தின்கண் போல்வார் சென்று மற்றவர் மாசொ ழித்த
விரத்தந்தோ யாடை தன்னை யிரத்தத்தாற் கழலு மாங்கே. 13

214. பற்றின பிறவித் துன்பப் பற்றறுத் தின்ப வீட்டி
லுற்றவர் பிறகுற் றத்தை யொழிப்பவர் மற்றல் லாதார்
கற்றுள கிளிப்போற் சொல்லிக் காட்டுதல் பிறர்க்கு முத்தி
குற்றம தற்றுக் கொத்தைக் கொத்தைக்குக் கோல்காட்டன்றே.
14

215. ஆர்த்ததப் பிறவித் துன்ப மறுத்தறி வுலகின் மிக்க
மூத்தவர் போன டித்து மூடமா மதிஞ ரெல்லாம்
தீர்த்திடார் தம்குற் றத்தைச் சிலர்குற்றம் தீர்க்கும் தன்மை
பேர்த்தடி யிடமாட் டாதான் பிறர்க்கூன்று கோலா மாங்கே. 15

216. அத்திற மதுவும் போகா தத்துவா வடைவா லாறு
மெய்த்திறல் உருவில் வைத்து வேதிப் பார்போல் நடித்துக்
குத்திரர் குத்தி ரற்குக் கூர்ப்பொருள் கூறுந் தன்மை
சித்திரம் சித்தி ரத்துச் செவிச்சொல்லும் வார்த்தை போலும். 16

217. தத்துவ வித்தி லாத சளக்கர்தாம் பிறரைச் சென்று
சுத்திதாம் பண்ணும் தன்மை சொல்லிடின் அவரில் மிக்க
தத்ததி யார்த்த ரில்லைத் தாமும்போய் நரகில் வீழ்வர்
சித்திரம் அவர்பால் இல்லை சீடனும் சிவனைச் சேரான். 17

## 10. சீஷ லக்கணம்

218. சத்தமெய்த் தயாவி ஞேடு சாந்தசஞ் சலனு மாய
அத்தமோ கிடுசார் ஞானி வத்தனு லசிய மோடு
இத்தன்மைக் குணங்க ளின்றி யிப்பிறப் பைமெய் யென்னுப்
பத்தியோடு முத்தி யெய்தும் பக்குவன் நல்ல புத்திரன். 1

219. இன்பமில் பிறப்பில் மற்றி லென்றும் வந்த போதமே
துன்பமென்று நின்று சொல்லு மாறு பேத மார்செய்தா
ரின்ப மான வீசனே விடற்கண் மன்னு தானேயோ
துன்ப மாக்கும் சொல்ல வேண்டும் வல்லவா கன்மமோ. 2

220. தன்மங்கொ டாயு மேற்ற விரந்து போம ஞதியே
கன்மமோ கொடுத்தி டாது கட்டுகைக்க தேது வான
தன்ம மான வீசனேற் றயாக்க டாஞ்சி லர்க்கிவிற்
கன்ம மன்று தானு மன்று கத்தா வன்று பக்குவம். 3

221. துன்ப மிக்கே யெங்கணுஞ் சுழல்வர் பாவ மிக்கிடி
லின்ப மிக்குன் மத்தரா யிருப்பர் புண்ணியஞ் செய்தார்
துன்ப மின்ப நாடொறுந் துடர்ந்த முக்கு மாதலா
லின்ப மான முத்தி நோக்க லில்லை யாத்ம போதமே. 4

222. தட்டி விட்ட பொன்கலுத் தடாமி ரண்டு மொத்தபின்
சிட்ட மாந்த ராசுநாச் செவ்வி தான வாறுபோல்
விட்ட நாள்க ளூற்றுவந்து வினையி ரண்டு மொத்தபின்
கெட்டிடும் வினையின் சேட்டை கேடில் போத மேல்கொளும்.5

223. இடுக்க ணுற்ற விப்பி றப்பை யாஞெழிப்ப தென்னென
மடுக்க லுற்ற சற்ப வாயின் மண்டு கம்ம தென்னவே
நடுக்க லுற்று நாதனே நல்கி டென்று வந்தபோ
தடுக்கு மீசர் தம்மரு ளளிக்க நல்ல பக்குவம். 6

224. ஆசி லாவ ருக்கர்தங் கதிர்கள் சென்று பற்றியு
மூசு வண்ட றைந்திடா வன்மொட் டலர்ந்தி டாமைபோல்
மாசில் பக்கு வத்தினின் வந்து நின்ற சீஷனைத்
தேசிகன் சிறந்து செய்யு மாஞ்ஞை சென்று மங்஛னே. 7

225. சலத்தின்மிக் கெழுந்து நின்ற தாமரையின் வன்முகை
யலர்த்தி ஞற்க ரத்தினு லழகு கெந்த மின்மையால்
மலத்தின் மிக்க பக்குவன் மனத்தி னூர்கள் தங்களைப்
பெலத்தின் மிக்க தேசிகன் பெலங்கள் செய்து மங்஛னே. 8

226. நற்றவங்கள் முத்தி நல்ல ஞான மேவு மிச்சையா
லுற்றவிச் செகத்தொ ழித்த லுக்கரித்த சோறெனப்
பற்ற தற்ற சித்தராய்ப் பராபரங் குருக்க ளன்றியே
மற்ருெர் தெய்வ முண்டெனு மனத்தர் பக்கு வத்தரே. 9

சீஷ லக்கணம் முற்றும்.

## 11. தீக்ஷா லக்கணம்

227. சலந்திகழ் மாயா காயந் தந்திசை மயக்கந் தீர்த்து
நலந்திக ழின்ப வீட்டை நாட்டிடத் தீக்கை தன்னை
யலர்ந்தமற் றனைத்து மாட்டா வாதலா லதனை யானிந்
நிலந்திக ழுயிர்கட் காக நிகழுமா சாற்ற லுற்றேன். 1

228. திகடரு ஞானந் தன்னைச் செனிப்பித்த லாலுஞ் சீடற்
கிகடரு பாதி பேதத் திண்கயி றறுத்த லாலும்
நிகடரு தீக்கை யென்றே நிகழ்ந்திடப் பட்ட தென்று
புகடரு மாக மங்கள் போற்றின வென்று கொள்க. 2

229. கனவினில் விடயம் போலக் கலந்தவிப் போகந் தீர்த்து
நனவினி லின்ப வீட்டை நாட்டிடுந் தீக்கை தன்னை
மனநினைப் பரிச நோக்கால் கூர்மனே வியங்க மச்சம்
எனவினை யதனாற் செய்வா ரேன்றுகொள் வியன்கு ருக்கள். 3

230. சொல்லிய தீக்ஷை செய்கை காலகுக் குமங்க ளாகும்
நல்லியல் ஞானத் தாலும் நலந்திகழ் தொழிலி னாலும்
மெல்லிய மனத்தாற் செய்யும் வியாபாரஞ் சூக்கந் தூலம்
பலலுயி ரறியக் குண்ட மண்டலம் பரப்பிச் செய்கை. 4

231. சுத்தநல் லாத்மா வாவான் தொக்கவவ் வுடல சித்தாம்
வித்தகத் தீக்கை பண்ண விளம்பிய தாருக் கென்னில்
மெத்தமா மிரண்டுந் தன்னில் பிணித்தகா ரணமாய் நின்ற
சித்தத்து மனத்தைச் சுத்தி செய்கவென் றறிக வென்றே. 5

தீக்ஷா லக்கணம் முற்றும்.

## 12. அத்துவாவிலக்கணம்

232. நின்றவவ் விடந்தன் னின்றும் நீங்கிவே றிடத்தை நோக்கிச்
சென்றுறு நெறிய தாகுஞ் செப்பிடி லத்து வாத்தா
னென்றவிம் மார்க்க மிங்கே தென்றிடி லிருஞ்சி வத்தோ
டொன்றிட வுயிர்கள் செல்லு மொண்ணெறி யாகு மன்றே. 1

233. அத்துவா வென்சொல் சீவ னபேதநற் சிவத்தோ டென்னிற்
கொத்தைக்கண் ணெளிகா ணப்போல் கூடியுஞ் சிவத்தைக்
[காணான்
பெத்தனைப் பெத்தந் தீத்துப் பேரின்ப வீட்டைக் காட்டும்
வித்தக நெறிகா ணென்று விளம்பிடி லத்து வாவே. 2

234. செடிபடு மாயா கூட்டந் தேசிகன் கிரமத் தாலே
அடியெடுத் தடியிட் டாப்போ லகிலதத் துவங்க ளெல்லாம்
படியைவிட் டோடு மென்மேற் பகர்ந்தபா வனையாம் பெத்தம்
முடியைவிட் டுயிரை முத்தி கூட்டிடுந் தொழிலா மார்க்கம். 3

235. அத்துவா வறுவ கைத்தா மாதிமந்தி ராத்து வாவும்
வித்தகப் பதாத்து வாவும் விளங்குவன் ஞத்து வாவு
மெத்திறத் துயிர்கட் கெல்லா மிடம்புவ ஞத்து வாவும்
தத்துவ வத்து வாவும் பின்புதான் கலாத்து வாவும். 4

236. மாருமந் திரமைந் தாரும் வான்பதம் எண்பத் தொன்ரும்
வேரும்பல் வன்னந் தன்னை விளம்பிலோ ரைம்பத் தொன்ரும்
கூருமண் டாண்டங் கூறின் மூவெழு பத்தீ ரேழா
மாருறு தத்து வங்க ளருங்கலை யைந்தா மன்றே. 5

237. ஆர்ந்தவிவ் வத்து வாக்க ளடைவடை வொன்றி லொன்று
சேர்ந்தவை வியாபி யாகிச் செறிந்திடுங் கலைக ளஞ்சில்
நேர்ந்தவக் கலைகள் நாமம் நிவர்த்தியும் பிதிட்டா வித்தை
சார்ந்தநற் சாந்தி சாந்தியா தீதையாஞ் சாற்றி லன்றே. 6

238. விளம்பிய வத்து வாக்கள் விரித்தது வெவ்வே ருக
வுளங்கொளுங் கலைக ளைந்தி லுட்புக வைக்கு மாறும்
களங்கமாங் குணம வற்றின் காரணக் கலைகள் வைக்குந்
தளங்களா மிருத யாதி தானமுஞ் சாற்ற லுற்ரும். 7

239. இடங்கொள் மந்திர நிவிர்த்திக் கிரதயஞ் சத்தி யோச
மிடைந்த நற்பதம் வியோமம் வியாபியில் விலோம மாகத்
துடங்கிமா தேவ வென்ற பதமந்தஞ் சொல்லில் நாலேழ்
திடங்கொளிக் கலைக்கு வண்ணஞ் சிறந்திடுங் க்ஷகார மாமே. 8

240. உரங்கொள் காலங்கி யங்கு முருத்திர புவன மந்தம்
புரங்கணூற் றெட்ட தாகும் புவியதே தத்து வந்தான்
பரந்தன குணங்கள் சொல்லிற் பார்தனிற் குணங்க ளைந்தாம்
வரந்திக மயன்நி விர்த்தி காரணன் மதிக்கி லன்றே. 9

241 செறிதரும் பிதிட்டை விற்சிர சுவாம மந்திரம்
மறிதரும் பதமு வேழு மகின்மயே சாந்த மாகக்
குறிதரும் மகார மாதி கொண்ட கார மீறதாய்
நெறிதரு வருண னன்முன் னேர்ந்த ஞான மூன்றுமாம். 10

242 அலந்துள வமரே சாதி யாம்புர மைம்பத் தாறுஞ்
சலந்தன்மேல் வியந்து வைத்த தத்துவ நாலா ருகும்
கலந்தநிற் குண ஞன் கென்றுங் காரணன் றிருமா லேயே
நலந்தரும் பிதிட்டை யாயே நாடுமிக் கலைய தன்றே. 11

243. வித்தகத்த கோரமுஞ் சிகையும் வித்தை மந்திரம்
பத்தொ டெட்டி ரண்டுமாம் பதிந்தி யான கராமிதா
வெத்திறத் துருவ ஞத்தி யெழுவருண கவ்வாதமா
யொத்து வாம முக்கியாதி யொண்புர மைந்நான் கொடேழ். 12

244. வருத்துறும் புருட ளுகி மாயை யந்த மாகவே
திருத்து கின்ற தத்துவம் சிறந்த விந்த வேழுமாம்
கருத்து றுங்கு ணங்கெடான் கனற்க ணின்ற மூன்றுமாய்
உருத்திரன் நிவத்தைபால் ஒடுங்கு கின்ற காரணன். 13

245. புகழின் மிக்க வசமொடு புருட சாந்தி மந்திரம்
நிகழ்பதங்கள் பத்தொ டொன்று நித்த யோகி ளுமமுத
லிகழி லாக்க வற்க மத்தி லேய்ந்த வருணன் மூன்றுமூன்
றிகழு வாய்மை யாதி யாய திண்புரம் மிரொன்பதாம். 14

246. மன்னு தத்து வங்கள் வித்தை யீசுவரன் சதாசிவன்
முன்னுமா குணங்கள் காலி னுற்றவிவ் விரண்டுமாம்
சொன்ன விந்த நல்ல சாந்தி தொக்கி நின்ற காரணன்
னின்ன கத்தி ருக்கவெவ் வுயிர்ம யேச ளுகுமே. 15

247. மந்தி ரங்க ளத்திரே சான நேத்தி ராபதஞ்
சுந்தரவோம் தோன்றுமேல் சோர்வில் சாந்தி யாதிதை
யந்தர விசற்க மாதி வருணன் சோட சங்களா
மந்திரப் புரன்னிர விர்த்தி யாதி பத்தொ டைந்ததாம். 16

248. சத்தியுஞ் சிவமுமே தத்து வங்கள் சாற்றிடில்
லொத்த வானி லுற்ற னின்ற வோசை யொன்று மே குணன்
நித்தமாஞ் சதாசிவன் னிறைந்த சாந்தி யாதீதையி
லத்த ளுய காரணன் னிடம் பிரம மரந்தரம். 1

249. எண்ணுமந் திரம்பத மெழுத்துடன் புரங்களும்
பண்ணு தத்து வங்களும் படைத்துநின் றுரைத்திடிற்
றிண்ண மாக வெண்ணியே சிறந்த செய்கை யாவையும்
நண்ணு மிவ்வி டத்திலே யென்றுநீ நயந்திடே. 18

250. அடைத்து வந்த அடைவினுல் அத்து வாக்க ளைந்திலுங்
கிடைத்த வைந்தை வாங்கி யஞ்சு கலையுள் கெற்ப மாக்கியே
படைத்தமுன் வினையிலாப் பற்ற வற்று ளெங்கணுந்
துடைத்த நற்சி வாஞ்ஞையால் தொகுத்துவற்றுள் வைத்திடே.19

251 சுருக்கி வைத்த கலைகளைத் துலங்கு மாவு ரத்திலும்
நெருக்கு கண்ட மத்திலும் நேர்ந்த தாலு வடிவிலும்
பெருக்கு மாச யத்திலும் பிரம மரந்த ரத்திலு
மிருக்கு மாறு வைத்திட ரியம்பி வந்த வடைவினுல். 20

252. வாதியாய் மயக்கு மாயை தத்து வங்கள் பாசமும்
சோதியாய்த் தனித்தனி தொகுத்துடலுள் சீவனைப்
பேதியாப் பரந்தொ டேற்றிப் பின்ன மற்றி யாவையும்
சேதியென் றெழிந்தி டாமல் தேசி கன்ற ளுஞ்ஞையால். 21

253. பற்றி னின்ற பரகுருக்கள் பாச மான சேற்றையுந்
துற்ற வன்ற னூடெழுந்து துகளில் ஞான வன்னியால்
உற்றெரி கொளுவ நோக்கி யொன்றொ ழிந்த தில்லைபின்
பொற்றி பஞ்செய் கற்புரப் பாவை தீப மென்னவே. 22

254. அண்ட மெட்ட டுத்துமுத் தரித்த டைத்து வைத்தவப்
பிண்டம் வெந்து வீழ்ந்த தன்பி னுனையஞ் செழுத்தினல்
பண்டு போல தன்றியே பாவ ரூப மாக்கிபின்
கொண்டு போன சீவ பாவ கங்கொணர்ந்து கூட்டிடே. 23

255. வந்தியோடு பூசை பண்ணு வித்து மந்தி ரங்களா
லந்த மத்தி லேச நீர மத்த மும்பி ராணனு
மெந்தை தாநீ கொண்டரு ளெனக்கு மற்றி யாதொரு
சிந்த னையு நீயலா லெனத்தெளியு மாறுசொல். 24

அத்துவாவிலக்கணம் முற்றும்.

## 13. சமயாசாரம்

256. சற்குரு பரசி வன்ற ருயினும் வாசி சாற்றின்
சற்குருச் சிவன்கோ பித்தாற் சமிக்குமச் சிவனு லென்றுஞ்
சற்குருக் கோபந் தன்னைச் சமிப்பிக்க வொண்ணு தத்தாற்
சற்குரு நாதன் பாதந் தப்பிடான் முத்த னன்றே. 1

257. சித்தநீ யுனக்கு நாளுஞ் சிறீகுருத் தந்தை தாயும்
வந்திநீ சேட்டன் றன்னை மன்னுநற் குருபா தம்போ
லுந்தியி னுயிரே போல வொக்கக்காண் கனிட்டன் றன்னைச்
சிந்தியாய் சிவன்றன் னேடே சிவபத்தர் தம்மை யுங்காண். 2

258. போற்றுகை தவிர்தல் நாதன் பொருளினைப் புசித்த லீதல்
தூற்றுதல் தோடந் தன்னைச் சொன்னது மறுத்தல் பொய்கள்
சாற்றுதல் குலமுங் கல்வி தனத்தபி மானம் பண்ணல்
மாற்றுதல் கொடுத்தல் தன்னை மற்றிவை குருவோ டாகா. 3

259. குருபாதம் பூசி நாளும் குருநாமம் செவியெப் போதும்
குருபாதம் தியானம் பண்ணித் குருகீர்த்தி தோத்தி ரம்பண்
குருபாதம் நினைக்கத் தீருங் குருதோட மல்லா தெல்லாம்
குருபாதம் தன்மே லுண்டோ குருவின்பேர் சிவனு மன்றே. 4

260. சத்திய முரைக்க நாளும் சகலபல் லுயிர்கட் கெல்லாம்
நித்தலு மிதமே செய்க நினைப்பது சிவத்தை யென்றும்
அத்தன் வேதாக மத்தில் அருளிய பொருள்கள் மூன்றும்
எத்திறச் சமயத் தோர்க்கும் எம்மதங் கட்கு மிட்டம். 5

261. கன்றிடு மாகி னெஞ்சம் கண்டவா றுண்மை சொல்லி
லன்றது சத்தி யந்தா னசத்திய மாயி னுங்கேள்
நன்றது பிறர்க்குக் காட்டி னுஞநற் சத்தி யந்தான்
என்றுமுன் னல்லோ ரெல்லாம் எடுத்துரை செய்தா ரன்றே. 6

262. என்றுமே யுயிர்க ளுக்கு மிதஞ்செய்கை தனக்கி தங்காண்
கன்றுமவ் வயிரி யேனும் காப்பது தனைத்து றந்து
நன்றுணர்ந் தோர்க்குத் திட்ட நானிலத் தருளி லாதார்
கொன்றிடு மாயிற் றன்னைக் கொல்லென்பர் பசுவு மன்றே. 7

263. தம்மைத்தா னோக்க வெண்ணித் தான்புறம் பொன்று கொல்
[வான்
தன்னைத்தான் கொல்கின் றன்காண் தன்னுயிர் விடுத்து
[மொன்று
தன்னைத்தான் கொல்லா தான்காண் தன்னைமுன் னோக்கு
[கின்றன்
தன்னைத்தான் நோக்கு கின்ற தத்துவ ரிட்ட மீதால். 8

264. கொல்லுதல் கொலைதா னிற்கக் குவலையர் கனிட்ட மாகச்
சொல்லுதல் நினைத்தல் செய்தல் சுத்தமே கொன்றன் மற்றுக்
கொல்லுதல் சாத்தி ரங்கள் கூறுமா கமத்திற் றட்டுச்
சொல்லுதல் தானு மன்றே சொல்லுவர் நல்லோ ரெல்லாம். 9

265. கொல்லாதான் றன்மந் தன்மேற் கூறின்மற் றில்லை தன்மங்
கொல்லாதான் செல்வந் தன்மேற் குவலயத் தில்லை செல்வங்
கொல்லாதான் துறவு தன்மேற் கொள்ளலாந் துறவு மில்லைக்
கொல்லாதான் ஞானந் தன்மேற் கூர்ந்தமெய்ஞ் ஞானமில்லை. 10

266. நினைத்திடுஞ் சிவத்தை நீதா னென்றவப் பொருளைச் சொல்லில்
அனைத்துயிர் தனக்கி ரங்கும் அருளுடை அறிவ தேகாண்
மனத்திலே அருளை வைப்பான் மாசில்நற் சிவன வன்பின்
நினைத்துநீ தயாவின் கண்ணே நித்தலு நின்றி டையா. 11

267. இப்படிச் சிவாக மத்தி னியம்பிய சமயா சார
மப்படிச் சரிப்பான் முத்தன் ஆதலாற் குருவின் முன்னே
செப்பிடா தொழியிற் சீடன் செய்தோடங் குருவுக் காகுந்
தப்பினு னுகிற் பின்பு தன்வினை தான்பு சிக்கும். 12

சமயாசாரம் முற்றும்.

## 14. அட்டாங்க யோகம்

268. சிட்டனல் வேத கத்தாற் செனித்துள பத்தி ஞானஞ்
சிட்டனல் வயிராகம்பின் செப்பின விந்த மூன்றும்
விட்டுற வெங்க ணுந்தான் விளங்கிட விளங்குகின்ற
வெட்டியோ கங்கள் தன்னை யீதிதென் றியம்ப லுற்றும். 1

269. வருத்தமா மியம மாதி மல்குசீர் நியமந் தன்பின்
னிருத்துவ மாத னமா மியக்குறும் பிராணு யாமம்
கருத்திுற் பிரத்தியா காரங் கலந்த தாரணை தியானந்
திருத்தமாஞ் சமாதி யந்தந் திகழுமட் டாங்க யோகம். 2

### 1. இமயம்

270. கொடுங்கொலை களவு காண்டல் கொடுங்கணூர் வலையம் [வைக்க
படுந்தொழில் பொய்கள் சொல்லல் பரர்பொருள் விரும்பி [யேற்றல்
விடுந்தொழி லிவற்றை விட்டே மிக்கநல் லங்க சேட்டை
யிடும்பையொன் றின்றிச் செய்கை யியமத்தின் குணம தன்றே.

### 2. நியமம்

271. பரிந்துமுன் தவங்கள் செய்கை பாவக சுத்தி யுண்மை
தெரிந்துநற் செபங்கள் பண்ணல் சித்தசந் தோட மங்கை
புரிந்துதான் சிவனை யென்றும் பூசைசெய் தேத்தி வாழ்தல்
விரிந்தவித் தொழில்கள் மிக்க நியமமாம் விதிய தன்றே. 4

### 3. பத்மாசனம்

272. இருந்ததி லாத னங்க ளியம்பிடி லனந்த நிற்க
வருந்ததில் பத்மா தனங்கேள் மடித்திரு கால்க ளோங்கி
யிருந்தவூ ருவினில் மாறி யிடக்கையால் வலக்கை தாங்கி
வருந்தலில் சித்த மொன்றி மலர்க்கண்கள் நாசி நோக்கே. 5

### 4. பிராணுயாமம்

273. சாற்றிய பற்ப மாறும் சார்ந்தொரா தனத்தி ருந்து
மேற்றிமுன் பிராணு யாம மியற்றினை யறிந்து பண்ணி
மாற்றிட வேண்டுந் திக்கில் மலஞ்சேர்ந்த தொண்ணு தத்தால்
நாற்றிசை நாடி சுத்தி யாதலால் நவிர்த்த லுற்றும். 6

274. நாடிக ளனைத்தி னுக்கு நலந்திக ழுந்தி யாதி
பீடுடை யிடையி னேடும் பிங்கலை யிடம்வ லம்போய்
முடிய கபால முற்றே முன்புபோ லிரண்டு மாறிக்
கூடிடுந் தனதா நாசி யென்றுகொள் குழுமி யன்றே. 7

275. துற்றிடுங் கபாலந் தன்னிற் சுழுனை காந் தாரி தானும்
பற்றிடும் வலக்கண் சென்று பறிந்துபோ மிடக்கண் சிங்கு
வுற்றிடும் வலக்கன் னத்தே யோங்கலம் புருடை பின்பு
மாற்றிடக் கன்னம் சென்று மன்னிடு புருடா வன்றே. 8

276. குகுத்திசங் கினியி ரண்டுங் குதத்தினு மிலிங்கத் தானம்
அகத்தினு மிருக்கு மன்றே அறிந்துகொள் ளவைதன் பின்பு
முகத்தின்மேல் மூர்த்தினி யந்தம் முதுகுதண் டிடையே நிற்கும்
சகத்தினிற் சுவனி யென்றே சாற்றுவா மிவற்றின் சுத்தி. 9

## 5. நாடி சுத்தி

277. ஆதியில் வாதை யாவு மற்றதோ ரிடமா யத்திற்
கோதிலா வீசர் பூசை குருபாதந் தொடங்கிப் பண்ணி
வாதியா மயக்கு மாய மசித்தத்தே டனைக ளெல்லாஞ்
சேதியுன் பார மீச வென்றுசே ரேகாந் தத்தே. 10

278. ஊற்றமா முண்டி யின்றி யுசிதமாப் பற்ப மத்தில்
சீற்றமற் றிருந்து கொண்டே சித்தமு மொருவ ழித்தாய்க்
கூற்றமாப் பாசந்தீர்த்த குருபரன் ருள்க ளுன்னி
யேற்றுக தாலுந் தன்னி னக்கிர மதனை நாக்குள். 11

## 6. கும்பகம்

279. சுந்தர வம்பி கத்தைச் சுவாலைக ளொடுங்கக் கூடிச்
சந்திர வின்பத் துள்ளே தன்வாம நாசி முன்னே
யந்தர மதிலே பாவித் தத்தைய வாயு வாலே
மந்திரம தாக வாங்கி வைத்திடு நாபிக் குள்ளே. 12

## 7. ரேசகம்

280. கும்பித்த சுவாலை யெல்லாங் கொழுவியென் னுடி தோறுந்
தம்பித்த மலம்பு றம்பே தள்ளுபா வகத்தி னுலே
வம்பித்த பின்பு மாறி வலத்திசை யறற்பு றத்தே
வெம்பிடா தெழும்பி மெள்ள விடுவிரே சகத்தினுலே. 13

## 8. அக்கினி மண்டலம்

281. வன்னிமண் டலமும் வன்னி வீசமும் வலத்து நாசி
தன்னினக் கிரத்தி முன்னே தன்னுடைச் சுவாலை யோடு
முன்னிய நாசி யாலே யுட்புக வாங்கி மெள்ள
மின்னியல் போல நாபி தன்னிலே மெள்ள வைக்க. 14

282. முண்டெழு சுவாலை யெல்லாம் முன்புபோல் நாடி தோறும்
தூண்டியே மலங்க டன்னைச் சுவாலையாற் புறத்தே நூக்கி
யீண்டுமவ் விரேபந் தன்னை யிரோசித்து வாமத் தாலே
மீண்டுமீண் டுற்றி ருந்து விரும்பியே செய்க விங்ஙன். 15

283. இப்படி யிருந்து நாளு மேகசித் தத்த னாகித்
தப்பின்றி நாலா மூன்றாஞ் சந்திபுக் கிருந்து செய்யச்
செப்புநா ளீரே ழாதல் திங்களொன் றிரண்டி னாதல்
அப்படி நாடி சுத்தி யாமென்று கொள்க வன்றே. 16

284. சுத்தமாந் தன்பின் னாடி தோன்றிடுங் குறிகள் சொல்லில்
மத்தமாஞ் சரீர முன்பு மந்தமற் றறநொய் தாகும்
முத்தமச் செயல்கள் தம்மே லுதரமா ரமுத வங்கி
யித்தன்மை யோடு நாத மெழுந்தபின் செயிப்பி ராணன். 17

285. பிராணனாற் பிறப்பி றப்புப் பிராணனாற் பெலமு மாயும்
பிராணனாற் புலம்பு சித்தல் பிராணனாற் கெகாகெ மங்கள்
பிராணவா கனமாஞ் சேட்டை பிராணன்விட் டின்மை யாலே
பிராணனாத் மகமாம் ப்ராணி பிராணன்விட் டென்ன வாய்
[வோ. 18

286. எண்ணிலாச் சித்தர் வானோ ரிருடிகள் யோகத் துள்ளோர்
திண்ணிய கால வஞ்சர் திரிகால ஞான மூர்த்தி
யெண்ணிலாச் சித்தி முத்தி யெய்தினா ரவர்கள் முன்பே
திண்ணிய பிராணன் றன்னைச் செயித்தவ ரென்று கொள்க. 19

287. தஞ்சமாம் பிராண னாகத் தசபையைச் சார்ந்து கொண்டே
நெஞ்சகந் துடங்கி யெங்கு நிகழ்ந்துபந் தனத்தைச் செய்யும்
பஞ்சன விருத்தி பெய்தாற் பஞ்சவா யுக்க ளோடு
மஞ்சுவா யுக்கள் பேத மனேகமென் றறிக வென்றே. 20

288. கடிகொள்பூ நாசி யாதி கால்களங் குட்ட மந்தம்
வடிவுதா நீல மாயே மன்னியா தார மாகி
யடிகளங் குட்ட நாபி யடைந்துதா னாசி முன்பும்
படியுநற் பிராணன் மீண்டு பகர்ந்திடில் விசேடித் தன்றே. 21

289. ஊறுமவ் வுந்திக் கண்ணின் றுதித்தகா ரத்தி னின்று
சீறிமே லெழுந்து போயே சிரமுட்டி நாசி யாலே
ஆறிரண் டங்கு லம்போ யத்தினா லொழிய மற்றை
யீறிலா வெட்டு மீண்டு மிழிந்துபோ யுந்தி சேரும். 22

290. பந்தநற் பிராணன் றன்னைப் பார்த்தது நாசி முன்னே
சிந்தைசெய் ததனை வாங்கிச் சேர்ந்தன நாபி பாத
மந்தம தாக வைத்தே யவ்வவை யூடு வாங்கி
வந்தவ மாற்க மன்றி வலத்தினால் மெள்ள மாறே. 23

291. ஏற்றுமாத் திரைத னக்கங் கிரட்டிகொள் கும்ப கத்தை
மாற்றுமாத் திரையு மங்ஙன் மற்றதற் பாதி கொள்க

நாற்றமே நாசி யாதி பாதாந்த நடத்தி யிங்ஙன்
சீற்றமில் கெமாகெ மங்கள் செய்திடச் செயமா மன்றே. 24

292. இனமனுப் பிராண னாதி யியக்குமா கெமாகெ மத்தை
மனமன மெங்கே செல்லும் வாயுவு மங்கே செல்லும்.
கனமனு கடுஞ்சு வாசங் கடுப்பிலே சென்று தூரத்
தினமனுந் தீபந் தன்னை யவித்தபின் செயித்தா யன்றே. 25

293. கேட்டிடங் கபான வாயுக் கிருகரந் துடங்கிப் பாதம்
பாட்டின மந்த மாகிப் பற்றிடு மிரத்தம் போன்று
மீட்டுமா கிருகா நாடி மேவிய பிருட்டம் பாயுந்
தோட்டினிற் பரட்டி னங்க டன்னிலுஞ் சரிக்கு மன்றே. 26

294. சத்திதன் னுருவ மாகிச் சவிசறக் கொண்ட பானன்
னொத்துமூ லத்து நின்றே யொழிக்கநீர் மலங்க டன்னை
யத்தைமுன் பிரேச கஞ்செய் தத்திலே பாதி பூரித்
தித்தையே கெமாகெ மஞ்செய் யிண்டனுஞ் சயம தன்றே. 27

295. துன்றிடுஞ் சமான வாயுந் தொடக்குட லெங்கு மேவி
நின்றிடுஞ் சந்து தோறும் நிசாகர ராகா ரம்போ
லன்றியும் விசேட மாக அடைந்துபின் னுரமும் நாபி
சென்றுபோ யுதர வங்கி செய்தெழப் பண்ணு மன்றே. 28

296. எவ்விடத் தின்றும் வாங்கி ரேசகம் பண்ணி முன்பே
யவ்விடத் திரேச கத்தி லிரட்டிபூ ரகத்தைக் கொண்டு
வவ்வுடைச் சமானன் றன்னை மலர்ந்த நாபிக்கே வைத்துச்
செவ்விய வரவும் போக்குஞ் செய்யவே செயமா மன்றே. 29

297. மூர்த்திமுன் னாதி யாகப் பாதந்தான் முழுது மந்தந்
தீத்தியா மனலா கார மெனச்சிறந் திரேப முற்றுப்
பேர்த்ததே விசேட மாகப் பின்மூர்த் தினிதாலுக் கண்ட
மார்த்த மாமுரஞ் செறிந்து நிற்குமென் றறிந்தி டன்றே. 30

298. நாவினு னுகர்ந்து வாங்கு நல்லபல் விரதந் தன்னை
மேவியே விடுங்கா யத்துள் மிடைந்தபல் சிறையி னுலே
தாவியே கெமாகெ மஞ்செய் சத்தனு முடலினி னுள்ளே
பாவுமா சலமா மென்றும் பகர்ந்திடி லுதான னன்றே. 31

299. மிக்குடல் வியாபி யாய விண்ணி னிந்தி ராயுத
மொக்கநின் றிலங்கி யெல்லா வெழுத்தை யுற்றி டத்திலே
தொக்குறு பரிச மான தொன்றுவித்து நின்றிடும்
மெக்கணுஞ் சுருக்கி யித்தை யிருதயத் தடைத்திடே. 32

300. சொன்ன விவ்வாயு வைந்திற் றேன்றிய பேத மைந்தாம்
தன்னில் முன்னுக வாயுச் சத்தியு மவிக்கல் பண்ணும்
மன்னியே கண்ணிற் கூர்மன் நடித்திமை கொட்டா நிற்கும்
துன்னிய கிருக ரன்ருன் றும்மல் கொட்டாவி செய்யும். 33

301. உளங்கொளுந் தேவ தத்தன் உடலகத் தெங்கு நின்றே
தளர்ந்திடா வண்ணங் காத்துத் தாங்கியே நடத்தா நிற்கும்
விளங்கிய சீவன் விட்டும் விடாதுநின் றுடலை வீக்கிப்
பிளந்துபின் போகா நிற்கும் பேர்சொலிற் றனஞ்ச
[யன்கேள். 34

302. அறிதரும் வயிர மூர்த்தி யந்தரி யாமி யோடு
நெறிதருஞ் சிவேத ளேடு சுவாதனும் வாயுத் தானும்
பொறிகளின் முகம்பி ருட்டம் பொருந்தியே பாத மத்தஞ்
செறித்தரு கரணங் கட்குஞ் சேட்டையாய் நிற்கு மன்றே. 35

303. ஏய்ந்தனல் விருதயத்தே இருத்திமுன் னுதானன் றன்னை
யாய்ந்தவிவ் வாயு வான அனைத்தையு வடைவிற் கூடி
வாய்ந்திடுங் கண்டம் தாலு மன்னிய வயிர மூர்த்தி
பாய்ந்திவை யூடெ முப்பிப் பையவே மூர்த்தினிக் கேள். 36

304. மூர்த்தினி தன்னில் வைத்து முயங்கிய வாயுத் தன்னை
யூர்த்துவ நாளத் தாலே யோங்கிட வெழுப்பி மெல்லப்
பேர்த்தது வாங்கிக் கொண்டு பிராணனி னிடத்தே கூட்டி
சேர்த்தின்னம் வாயுப் போக்கைச் செய்திடச் செயம தன்றே.37

305. உரவிய பிராணு யாம முற்றிருந் திங்ஙன் செய்தாற்
பரவிய காயம் வேண்டிப் பாரிலெஞ் ஞான்றுஞ் சென்று
விரவிய தன்கா யத்தே யிருக்கலாம் வேண்டுங் காலம்
நிரவய நின்ம லத்தை நினைத்தபின் விடலு மாமே. 38

## பிரத்தியாகாம், தாரணை

306. சினத்தொடு பொறிகள் சென்று சேர்ந்து தந்தம் புலன்க
ளனைத்தை யும்பற் றிக்கொண் டவாவினைப் பண்ணு வண்ணம்
நினைத்தெழு மவற்றை யெல்லாம் நிரோதிக்கை யாகு மென்று
மனத்தினிற் பிரத்தியா காரம் ஏன்றுகொள் மதித்து நீயே. 39

307. ஆதாரஞ் சுவாதிட் டானம் மணிபூ ரகமா மதற்பின்
மீதாரு மனுக தந்தான் வெய்யவ னிடம்வி சுத்தி
சாதா ரணமா மாஞ்ஞை சந்திரமண் டலமே தாலு
மீதாகு மிவற்றிற் சித்த மிருத்தல் தாரணையா மன்றே. 40

### தியானம், சமாதி

308. இலயமற் றிவையைக் கும்பித் திலங்குமுக் கோணத் துள்ளே
வலையமுற் றுறங்குஞ் சத்தி மயக்கற வெழுப்பி மென்மேற்
கலைகளுட் போந்து நின்று கட்டுடைத் தமுதை யுண்ண
சிலையமைப் புறஞ்சித் தத்தால் நோக்குதல் தியான மன்றே. 41

309. சேர்ந்தவிந் திரியங் கரணஞ் சேட்டைகட் கேது வாகி
யார்ந்துட லிடத்தி னின்று மவற்றுடன் றேய்வொன் றின்றி
யோர்ந்திடி லரிய வின்பத் துள்ளுசை தனமா யென்றுஞ்
சாந்தனுந் தன்னைத் தானே காண்கைகாண் சமாதி தானே. 42

அட்டாங்கயோகம் முற்றும்

## 15. அரும்பொருள் கூறல்

310. விடையமே புறக்க ணேடி விரும்புமவ் வளவு ஞான
முடையனன் றுணர்வி லாத வளவுந்தன் னுருவங் காணு
னிடைவில் பின்றன்னைத் தானெவ் வளவறி கிலானவ் வளவு
மடைவிலா னின்ப முத்தி யவ்வளவுங் காணு னன்றே. 1

311. வார்ந்த மூவகை ஞானத்து வைகாரி கன்ம காண்டம்
ஓர்ந்தநற் பிராகிரு திதான் யோக சித்தத் தாற்கும்
ஆர்ந்தவப் பிராகிரு திதன் னந்தாத்மா வதனைக் கண்டே
யோர்ந்துமற் றியாவும் விட்டே யுதாசனித் திருப்ப ரன்றே. 2

312. சனித்திடாக் கோச ரத்திற் றுன்போதா வரிய தொன்றே
மனித்தரா யறிவுண் டாகை மற்றதி லரிய தொன்றே
யனித்தமில் தன்னை யாயும் மறிவதி லரிய தொன்றே
யினித்தமா யின்பங் காண்பா னியாவரி லரிய தொன்றே. 3

313. அறியலாம் புண்ணி யங்கள் செய்திடு மவரை யெல்லாம்
நெறியினல் மந்தி ரத்தால் நிட்டரைக் காண லாகுஞ்
செறியலாம் யோகத் தாலே திரிகாலம் வஞ்சித் தாரை
யறியலா மறியொ ணுதா மாத்மவே தகனை யையா. 4

314. தேசிக ரனந்த மந்தச் சிசுக்களு மனந்த மாகும்
பேசிடிற் பலமு மங்ஙன் பேதையாம் பெருங்க டற்குள்
ளாசிலா வின்ப மான ஆத்மவே தகனுக் கேகாண்
வாசிதா னுள்ள தையா மற்றவற் குரைக்க வுண்டோ. 5

315. சொல்லுஞ் சாத்திர மெங்கேனும் சுருதியுஞ் சொலுமெங் கேனு
நல்லுல கினிற்கி லேச நாடிலெங் கேனுமையா
பல்லுரை யில்லா வின்பப் பரமுமெங் கேனு மாகு
நல்லுரு நாடிக் காண்பார் நானிலத் தெங்கே யெங்கே. 6

316. பன்னாளும் பண்ணிப் போந்த பாதகச் சித்தத் தாற்குச்
சொன்னாலும் பொல்லா தாகுந் தூரமா யரிது காண
நன்றான மனத்தி னாற்கு நன்றாகி யொன்றாய்த் தோன்றும்
தன்னாலே தன்னைக் காணும் தற்பரா வமுத மன்றே. 7

317. அஞ்ஞானச் சித்தத் தாற்கு மாவாக னாதி பூசை
மெஞ்ஞான முதித்த தாலே வீட்டைக்காண் பொருட்ட தாக
வஞ்ஞான மில்லா தாருக் காத்துமா விலிங்கந் தோன்றும்
மெய்ஞ்ஞானந் தானே தானும் வீடுந் தானேதா னாகும். 8

318. பொன்னைத்தான் கண்ட வன்போற் புழுதியை யரித்தெங் [கண்ணு
மன்னித்தா னுடன்ம யக்கும் மாயதத் துவங்க ளாய்ந்தே
யுன்னித்தா னறிய வின்பத் துருபசை தனமா யுள்ள
தன்னைத்தான் கண்ட வற்குத் தானென்றார் பிறப்புத் தானார். 9

அரும்பொருள் கூறல் முற்றும்

## 16. தனையறியோகம்

319. தன்னைத்தான் காணி லல்லாற் சாராது முத்தி யானால்
என்னைத்தான் என்னை நானே காணுமா றருள வேண்டும்
சொன்னத்தாற் பொருளன் றையா சொற்குரு முகத்தா லாகும்
பின்னைத்தான் யோகத் தாலும் பிறந்திடக் கண்டு கொள்ளாய். 1

320. சிந்தனை யாவும் விட்டுச் சித்தத்தை யிருத யத்தே
சந்ததம் வைத்தி ருக்கத் தற்சுவ மான ரூபம்
பந்தனஞ் செய்யு மத்தைப் பற்றிமற் றியாவும் விட்டால்
வந்துதி செய்யு முன்றன் வடிவில்பே ரின்ப ரூபம். 2

321. புறக்கண்மேல் விடயத் தோடிப் பொறிகள் செய்கின்ற தெல்லா
மறக்கநித் திரைதா னெங்ஙன் வருமதின் மனத்தை மெள்ள
வுறக்கமு முணர்ச்சி யின்றி வைக்கவுன் னுருபத் தின்பம்
மறக்கினும் மறக்கொட் டாதே வந்துதி செய்யு மன்றே. 3

322. மற்றொரு சிந்தை யின்றி மாதரா ரோடுங் கூடி
யுற்றிருந் திழையும் போகத் துறுமின்பத் துருவந் தன்னைப்
பற்றியங் கதுவும் பார்க்கப் பாவிக்கப் பாவிப் பில்லா
முற்றுமே யையா யின்பம் முளைத்தெழு மென்று கொண்ணீ. 4

323. எங்கெங்கே சந்துட் டந்தான் ஏய்ந்தது மனந்தனக்கே
யங்கங்கே மனஞ்ச மிக்க வசஞ்சல னுயிருப்ப
தெங்கெங்கு மிடைய ருதே வின்பமா முன்றன் மேனி
யங்கங்கே தோன்று நிற்கு மனுபவி யத்தை நீயே. 5

324. அண்டமெண் டிக்கெங் கெண்ணு மடங்கச் சூன்னியம தாகக்
கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டே
யண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக்
கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில் வந்துதிக்கு
[மன்றே. 6

தனையறி யோகம் முற்றும்

## 17. பரமயோக லக்கணம்

325. பெற்றநற் றந்தை தாயும் பிள்ளைபெண் டுடன்பி றந்தார்
உற்றசுற் றக்குமாத்தோ டொக்கவே யிருப்பி னுங்கேள்
பற்றிலன் பரம யோகி பத்மபத் திரந்தா னென்றுந்
துற்றதோ யத்து ணின்றுந் தோய்விலா வாறு போல. 1

326. அளையாரு மநேக நாக மார்த்தெடுத் தணிந்தே றட்டு
இளையா மந்திர பெலத்தா லெங்ஙனே விளையாட் டிங்ஙன்
துளையாருஞ் செவிதொக் காதி துகளாமிந் திரியங் கொண்டு
விளையாடும் யோகி தன்னை விடயங்கள் செய்வ தென்னே. 2

327. மன்னுநன் மருந்தி னோடும் மந்திர பெலத்தால் நஞ்சைத்
தின்னிலுஞ் செரிக்கு மாங்கே தீவினை யனந்த கோடி
பன்னுநற் பரம யோகி பண்ணிலும் நசிக்குங் கேளாய்
மன்னு மாத்திரை தனக்குள் விமலபா வகத்தி னாலே. 3

328. செஞ்சுடர்த் தீயுட் புக்குச் சிலர்கள் மந்திர மருந்தாற்
பஞ்சிழை யதற்குஞ் சேதம் படாமைபோந் தேறு மாங்கே
நெஞ்சக முழுது மின்பம் நிறைந்தபன் ஞான யோகி
வஞ்சமா மாயக் கூட்டம் மயக்கினும் மயக்கு றானே. 4

329. அழுக்குடைச் சாதி யோரு மடைந்தால்மெஞ் ஞானி தன்னை
விழுப்புடன் றலைவ ராவர் வேதகக் குளிகை சேர்ந்த
இழுக்குடை யிரும்பு செம்பு மிலங்குபொன் னுகு மாங்கே
ஒழுக்கமோ டவன்றுள் சேர்மின் ஞேங்குவீ டெய்த லுற்றீர். 5

330. சிற்சொரு பத்து ஞானஞ் சேர்ந்திட மிகவு மெங்குங்
குற்சிதத் தான மெல்லாங் கோடிவிற் கிடைக்கு ளெங்குந்
தற்சிவத் தானஞ் சுத்தந் தபோவனந் தீர்த்த மாகு
நற்சுடர் புக்கி டந்தான் நன்மையாய் விளங்கு மாங்கே. 6

331. பாத்திர மனைத்திற் சத்தாம் பாத்திரம் பரம யோகி
யேத்திசைத் தவருக் கீந்தால் எவ்வுல குக்கு மாகும்
பார்த்தவப் பிரதி மங்கள் பணிந்தவர் வேண்டித் தீந்தா
லேத்திசைத் தேவு மாற்றுர் யோகீசர் தம்மை விட்டே. 7

332. வருந்திய சரிதை தீர்த்த மந்திர செபங்கள் பூசை
பொருந்திய தியானம் யோகம் போதத்துக் கேது வாகும்
திருந்திய ஞான முற்றுற் சிற்சொரு பத்தை நோக்கி
யிருந்திடு மிவைபின் பாரா னின்பனும் யோகி யன்றே. 8

333. எங்கணும் நிறைந்த வின்பத் தெய்திய பரம யோகர்
தங்கணிற் காண்ப ரத்தைச் சகளம்பின் புறம்பு பாரான்
அங்கையிற் றிரளை விட்டே யவாவினுல் முன்கை நக்கும்
பங்கமா மதிஞர் போலா மென்றனர் பயனை யோர்ந்தே. 9

334. பெத்தபா வகத்தை விட்டும் பிழம்பில் தற்சொருப னெக்குஞ்
சித்தனெங் கிருந்தா னங்கே சிவன்முகஞ் செய்யா நிற்குஞ்
சுத்தமாஞ் சத்தி வீசந் தோன்றிடு மனைத்து மங்கே
யெத்தைநாம் புகழ்வோம் தன்னை யினிச்சொல்லுந்
[தாற்பரியம். 10

பரமயோக லக்கணம் முற்றும்.

## 18. அனுபோக லக்கணம்

335. இனிப்பல சொல்லி யென்னே யோகங்கள் சித்தி யாய
தனிப்பெரும் பொருளே நல்காய் தற்சொரு பத்தை முன்னம்
முனிப்பெருந் தகையோய் செவ்வாய் முறுவல்செய்
[தருட்க ணேக்கிச்
செனித்தே னிப்போ தும்பாற் றெரிந்துசெப் பென்றுய்
[கேளாய். 1

336. செப்பொண்ணு தென்னு லத்தைச் சிரசாதி பாத மந்தங்
கப்பெலாம் விட்டு ரோமங் கம்பித்து விதிர்விதிர்த்து
அப்படி யுளேசீத் தத்தா யங்கங்க ளனைத்து நெக்கு
ஒப்பில்பே ரின்ப மெங்கு முகமதா யுதித்த தன்றே. 2

337. பண்டுநீ நானென் றெண்ணப் பண்ணிய மாயா கூட்டங்
கண்டிலே னென்னே யுன்றன் கண்வலி யிருந்த வாறே
யண்டனே யண்டர் கோவே யளவில்பே ரின்பந் தானே
எண்டிசைக் கீழு மேலு மெங்கணு நிறைந்த தெந்தாய். 3

338. ஆதனுய்க் காணு துன்னை யளவிலாக் கால மெல்லாம்
பேதனுய்ப் பிறந்து வந்த பேதைமை யென்னே யென்னே
நாதனே நாத மூர்த்தி நாதாந்தத் தலைவா வுன்றன்
பாதநா னடையப் பெற்றுப் பகரொணு வின்ப னுனேன். 4

339. இரண்டென நடுக்கி டந்த விருண்மா யக்கரை யழிந்து
புரண்டது வின்ப மெங்கும் புறவெள்ளப் பட்டின் றன்றே
முரண்டவண் டணிதார் மார்பா முத்தனே முத்தி யெல்லாந்
திரண்டதோருருவே யுன்றன் றிருக்கடைக் கண்பட் டன்றே. 5

340. வஞ்சகம் பண்ணி மாயை வகுத்தபல் துன்ப மெல்லாம்
பஞ்சழ லென்னப் பொன்றிப் பாறின பவங்க டானு
நெஞ்சக நிறையத் தந்தாய் நிகரில்பே தானந் தத்தை
யுஞ்சன னடிநா யேனு னுன்னருள் பற்றி நின்றே. 6

341. இத்தனை நாளும் புத்தி விகற்பத்தை யென்ன தென்றே
அத்தனே யடியேன் போருக் காதனு யகப்பட் டேனுன்
சுத்தமா யின்ப ரூபத் தூர மின்றித் தூரம்மாய்
வித்தகா நீதான் செய்த வித்தைதா னிருந்த வாறே. 7

342. பொறிபுலன் கரணம் பூதம் புணர்ச்சிசெய் தளவில் காலம்
பிறிவுமாய் வகுத்த மாயப் பேதைமை யெல்லாந் தீர்த்துச்
செறியுமா றறிய வின்பச் சீவனன் முத்தி தந்தாய்
அறிவுமா யறியப் பட்ட பொருளுமா மண்ண லேநீ. 8

343. பெண்ணலி யாணு னென்னப் பிறந்துழன் றநேக யோனி
கண்ணலி காலம் வந்த கடுந்துய ரனைத்துந் தீர்த்து
விண்ணென முழங்கு நாத விந்துவும் விளக்கா வெங்கு
மண்ணலே யின்ப வெள்ளத் தழுத்தினு யென்னை யின்றே, 9

344. செந்தியு மிருக்கக் காட்டஞ் செற்கொண்டு மண்ணு மாங்கே
யெந்தையே யின்ப னுய விறைவநீ யிருக்க வென்னு
ளந்தனுய்க் காணு துன்னை யளவிலாக் கால மெல்லாம்
வந்ததே பிறந்தி றந்து மாயையின் வசத்த தாயே. 10

345. பகைத்தென்னை மிகையே பண்டைப் பண்ணிய தொண்ணூற்
[றுறும்
திகைத்தன மாயை யார்செய் கிரிகையுந் தெண்பட்ட தன்றே
நகைத்துநீ பார்த்த போதே நாதனே துன்ப நீங்கி
வகைப்பில் பேரின்ப மானேன் மற்றுநா னுரைப்ப தென்னே. 11

346. விரையுமா பூதம் விட்டு வேட்கைநோய் வெகுளி யும்போய்த்
திரையிலா நீர்போ லென்றன் சித்தசஞ் சலமுந் தீர்த்து
கரையிலாக் கருணை வெள்ளக் கடைக்கணி வைத்த போதே
யுரையிலா வின்ப மானே னுரைப்பதென் னினிமற் றெந்தாய். 12

347. பன்னிடப் பட்ட வெந்நூல் பரிதிமா ரமரர் நிற்க
வுன்னுட னெண்ணப் பட்டா ருடனின்று முணரா மன்றே
வென்னுடற் புகுந்தெங் கண்ணு மின்பமாய் நிறைந்த தன்மை
சொன்னடற் கேது வெங்குந் தோன்றிடக் கண்டி லேனே. 13

348 முப்பொறிப் பகைக ளாறு முக்குணங் குற்ற மற்று
மெப்பொறிப் புலன்க ளெல்லா மிரிந்தன வென்னை விட்டே
கப்புறு கருத்துந் தீர்ந்தேன் கல்வியு மமைந்து நின்றே
யொப்புறு வகையி லின்பத் துன்னைநான் கண்ட போதே. 14

349. ஐகண்டப் பட்டுச் சட்டோ வாக்கைவிட் டலம்வந் தென்று
மைகண்டத் துழலு மாயத் தந்திசை மயக்கம் போம்போல்
மெய்கண்டே னிம்மை யேநான் விளங்குபே ரின்பமுத்தி
கைகண்டேன் கேட்ட தெல்லாங் கருத்தின்று முடிந்த தன்றே. 15

அனுபோகலக்கணம் முற்றும்.

## 19. விருவுரை

350. மன்னனின் னருளால் முன்னம் மறைந்தபா சம்போய் நாயேன்
என்னைநான் கண்டு மெந்தா யின்னமோர் விண்ணப் பங்கேள்
கன்னலே உடம்புக் கெல்லை கன்மமுள் ளளவு மன்றே
பின்னையிவ் வுடலென் கன்மம் பெத்தமுந் தெறத்தப் பாட்டே. 1

351. வேதித்த போதே வீடு விளம்புநற் சத்தியோ முத்தி
சேதித்துப் பாசத் தேயத் திருக்கிலுஞ் சீவ முத்தர்
வாதித்த தாகிற் றுனே மாற்றியுங் கொள்ள லாகுஞ்
சோதிக்க வேண்டா சொல்லிற் பொய்த்தன்றே பிறவி
[யன்றே. 2

352. அந்தித்த பாச மற்று லாக்கையும் வறுத்த வித்தேற்
பந்தித்த வுடற்கி லேசம் பண்டுபோ லுண்டா வானேன்
பெந்தத்தின் வாச னைகாண் பெருங்காய மாண்டும் பண்டம்
கந்தத்தில் நாச மில்லா வாறெனக் கருதிக் கொண்ணீ. 3

353. பற்றிமுன் மறைத்த பாசப் படனமாம் போர்வை யெல்லா
மற்றமைக் களவை காண்கை யாத்துமாத் தன்னைக் கண்டுஞ்
செற்றதே தென்னில் முன்னை விசைசித்தக் கிலேசங் கோலாற்
சுற்றுகை குலாலன் வீட்டுஞ் சுழலுஞ்சக் கரம்போ லன்றே. 4

354. இருக்கிலுஞ் சீவ முத்த னிருக்குதே னென்று சொல்லிச்
சுருக்கமில் பரம முத்தி சுவேச்சையாற் கூட வைத்தாய்
பெருக்கமற் றியாவும் பெற்றேன் பெறவேண்டு மின்ன
[மொன்றை
யுருக்கியுள் கசிந்துன் ருள்கட் கொழிவிலா யன்பே யன்பே. 5

355. கோதில் நற்சிவந் துடங்கிக் குருபாரம் பரியஞ் சுத்தி
தீதிலா தென்று மென்றுஞ் சிறந்தவற் குண்டவ் வாஞ்ஞை
போதுசெய் யாத பத்தி புண்ணியா வுனக்குத் தந்தோஞ்
சேதிநீ தானும் பாசந் தெளிவுள வுயிர்கட் கன்றே. 6

356. அண்ணல்நீ யருளி னக்கா லணுமணல் மேரு வாகும்
விண்ணினி லுடுவு மிக்க சந்திரன் ருனு மாகு
மண்ணிலே யடிய னேற்கு வானுளோர்க் கறியா வின்பத்
தெண்ணிலாப் பதம ளித்த இறைவனே போற்றி போற்றி 7

357. எல்லாருங் காணப் பொல்லா விரும்பைப்பொன் ணுக்கி
[யத்தைப்
பல்லாருந் தொழுந்தே வாகப் பண்ணிவைத் தாங்க ளுதி
பொல்லாவென் பிறவித் துன்பம் போக்கியாண் டின்பந்
[தந்தாய்
சொல்லாய்கைம் மாறென் செய்கேன் தோற்றியா வுனது
[முன்னே. 8

358. எனக்குநீ செய்வ தெல்லா மிந்தநூல் தன்னை யென்று
முனக்குநீ நல்லாய் போல நோக்கியொண் ணெறியே சேர்வான்
றனக்குநீ யறிவி நாளுஞ் சம்பிர தாய மாக
மனக்குறை யறுக்கு மாஞ்ஞை வழிவழி யறைய வேண்டும். 9

359. ஒப்பி லடியொன் றிரண்டொண் கமல முவமிக்கும்
கப்பி ரண்டு பல்கொம்பாங் கதிரொ ளிசே ரடிபோற்றி
செப்பில் நஞ்செகத் துருவிலேபூச் செழும்ப லங்க ளுயிர்க்
யப்படி சென்ரென் ருகு மடிதந் தாயடி போற்றி. [களித்தே 10

360. ஆசதா முடற்பிறப் னனுதியாந் துடக்கறுத்து
மாசிலா வீடளித்த வள்ளலே போற்றி போற்றி,
பாசபே தன்னு டாதுன் பரசர ணங்கடந்த
வீசனே போற்றி போற்றி யெந்தையே போற்றி போற்றி. 11

361. உணங்கிடா தனைத்து நீயாய் நின்றுமொன் றில்லாய் போற்றி
யிணங்கிடுஞ் சகத்தா மிந்த வியந்திரத் தலைவா போற்றி
பிணங்கிடுஞ் சமய தர்க்கப் பிணக்கறுந் தாண்டாய் போற்றி
வணங்குமென் பவநோய் தீர்த்த வயித்திகப் பெருமான்
[போற்றி. 12

விஞவுரை முற்றும்.

**இளங்காரிகுடி மெய்ம்மொழித்தேவர் அருளிய**

**மெய்ம்மொழிச் சரிதை சுபக்கம் முற்றும்.**

# பரபக்கம்

## நையாயிகம்

மக்கள்மார் மணலூண் அன்ன வசனமாத் திரத்தால் முத்தி
பொக்கமே சொல்லா திந்நூல் பொ ... ... ...
... ... ... ... ... ...
மெய்ம்மொழி யாலே நாமம் மெய்ம்மொழிச் சரிதை என்றே.

பிறக்குமிவ் விடத்துத் துன்பம் பிணிபல உறுகை துன்பம்
உறக்கமும் உணர்வுந் துன்பம் ஒண்பொருள் தேடல் துன்ப
மிறக்குமவ் விடத்திற் துன்பம் ... ... ...
... ... ... ... ... ... ...

நையாயிகம் முற்றும்

ஆகத் திருவிருத்தம் 77

## லோகாயதம்

வானங்கா லங்கி மண்ணீர் மணமிருந் தெனநீர் தோன்ற
தானவற் றுடலா யத்திற் சதுர்த்தச புவனம் போத
மானது கரட்டத் தீவோன்... ... ... ...
... ...பின்புகுதா பூத காலமே கர்த்தா வன்றே. 1

....சைதன வீச ஞத்மா சார்விணை மறுபிறப்பு
பொய்யதாம் அளவை என்றே பூதங்கள் புணர்ச்சிக் காலம்
செபதப வியல்பா லெல்லாம் சனித்தவா றங்கு முத்தி
மைதுனம் லோகாயதம் மதியிது நன்று நன்று. 2

அன்னத்தி லிருநீர் மெய்யே அன்னமுன் பரக்கி ஞரார்
அன்னத்தி லிருநீர் காணு மாக்கையா மாறென் னன்றி
அன்னத்தை நுகர்ந்த வாக்கை... ... ... ன்னி
லன்னத்தி லிருநீர் தோன்றும் அதற்குமுன் பியாக்கை
[யுண்டோ. 3

ஆதலா லன்னந் தன்னு லாக்கைசம் பவியா மற்றத்
தாதுவா முடல்க டம்மி லிழைந்தநீ ராக்கை யென்னில்
மாதரார் மைந்த ரோடே மகிழ்ந்திழை யிருநீ ரென்றும்
போதமா முடல்க ளாகாப் பிறப்புட லிருநீ ரன்றே. 4

காயிலை நீறு கூட்டிக் கசிந்த செந் துவரே போல
வேயுமைம் பூத மென்ருய் விழையலா முடலுட் போதந்
தோயும்போ தொன்ரே டைந்து தொக்கிடத் துடல தொன்ரும்
வாயுமைம் பூத மன்ரு மாகடை ... ... யுமறிவு மையா. 5

உடம்பினி லுணர்வா மென்னில் உதித்திடுங் காட்டத் தீப்போல்
உடம்புள வளவா மங்கே யுணர்வது முறைய வேண்டும்
உடம்பது கிடக்க விங்கே யுணர்வது போத லாலே
உடம்பினி லுணர்வு வேரு முணர்விலீ ருணரு மன்றே. 6

உட ... குருநீர் நாளு மூக்கசே தனமாய்ப் போகை
யுடல்தானே யுணர்வா காதவ் வுயிர்போக வுடல்வே மத்தா
யுடல்வேவ திருநீர் சார்வா லுயிர்வந்து புகிரி லையா
வுடலொடு வுயிரு மோரா வுரைக்கையைத் தவிர்நீ யையா. 7

இறந்தன பிறவா வென்னி லிருநிலத் துள்ளோர் நாளும்
சிறந்தநற் றன்ம தானம் செய்திடக் கூடா வாகும்
பிறந்தனு பவியா தாகில் பெறுவதென் னென்று சொன்னீர்
மறந்தனி லோக வாதம் மலைந்திலை யென்ன லாமோ. 8

உலோகர்தம் வார்த்தை மெய்யே யுடற்பிறப் பின்பு மென்றிவ்
வுலகரெல் லாருஞ் சொல்ல வுடலிட ரென்ப ரென்னீ
ருலகரி லுயர்ந்தோ ரெல்லா முடற்பிறப் பிடரே யென்கை
யுலகமு முயர்ந்தோர் தாமும் முண்டென்பர் மறுபிறப்பே. 9

இன்றுதாய் மலடி யென்று மென்றவன் போல வுன்சொல்
லொன்ருகக் கொள்ளா ரொன்றைப் பலருண்டென் றுரைக்கும்
[போது
நன்ருக வுண்டா கித்தான் நானிலத் துள்ள தையா !
பொன்ருவும் வழியுண் டென்னும் புத்தனில் வழிகே
[டுன்பால். 10

ஓங்கின மரத்தின் மண்டு முதிர்ந்த வச்சரு கேழா
தாங்கின விறந்த வாக்கை யறிவுபின் பிறவா தென்னி
லோங்கின மரந்தா னன்ரே வுதிர்ப்பதுந் தளிர்ப்ப தையா
வாங்கன மாத்து மாவு மாக்கைவிட் டெடுப்ப தன்றே. 11

கோலமாங் கலைகள் கூடிப் பிறந்தபின் பிறந்தாங் காகிப்
பாலனுய்ப் பிறந்து பைய வளர்ந்திடு மதியே போலத்

தூலமா முடல்விட் டாத்மா சூக்கம வுடலாய் நின்று
மேலுஞ்சென் றிருநீர் தோய்ந்தூழ் வசத்துட லுடலுட்
[டோன்றும். 12

போனமுன் னுடலிற் கன்மம் புகுந்தவவ் வுடல்தான் காட்டும்
ஞானவிந் திரியஞ் செய்தி நாமமுங் குணமு மாயுந்
தானமுந் தன்மஞ் சார்ந்த தனித்தனி வெவ்வே ருனு
லீனமா ஞானி கட்கு மிம்மையி லம்மை தோன்றும். 13

வினைப்பய னில்லை யாகில் விரும்பினிர் நாடு நாளும்
நினைத்தெழுங் கரும மெல்லாம் நினைவாக முடிய வேண்டு
மனைத்துமுன் வசமொன் றின்றி யாக்கமு மழிவுங் கண்டால்
முனைப்பலத் தளவா யிம்மை முயற்றி யிற்பலமின் றேராய். 14

இறந்தபின் பிறவா தாயி னிருவினை யில்லை யாயின்
அறிந்துநீ பெறுவ தென்னே வற் ... லா ரிழப்ப தென்னோ
விறந்தபின் பிறவா வாயி னில்லைமேற் பெறுவ தன்றே
யறிந்தன ருனக்கொன் றீயா ரறிவிலா வுலகா யிதானீர். 15

வேலமுட் கூச்சிட் டாரும் விளாங்கனி திரட்டி னாரும்
சாலமுன் னோர்ந்து பார்க்கி லில்லைத்தன் னியல்பே யன்றோ
மூலம்வித் திலைகாய் பூண்டு முண்டெழு மழையுங் காற்றுங்
காலங்கள் புரியத் தோன்றிக் கழிதல்போற் காலங் கத்தா. 16

சடங்களா மாபூ தங்கள் தனித்தனி புணர்ச்சி காலம்
அடங்கலுஞ் சகத்திற் றேன்று மவையவ மாத லாலே
சடங்கள் காலங்கள் செய்யத் சம்பவித் திடாது கன்ம
மடங்கலு மறிந்து தத்த மளவினிற் செய்வான் வேண்டும். 17

ஆர்ந்தவக் காலஞ் செய்த நவக்கிர கங்கள் போயச்
சோர்ந்தவப் பயிரைக் கண்டு துளிமுத விடாத தென்னே
சாந்தியைப் பண்ண வென்னே தாணியா மழையுங் கண்டோம்
சேர்ந்தவச் சகத்தின் கத்தாச் சேதன சத்தி கண்டாய். 18

விண்ணில்லார் மைது னத்தின் மேலிலை யெனவிரும்ப
மண்ணுளார் முத்தி யென்ன வாலிதோ வவரிற் போத
மெண்ணிலா வின்ப முங்கள் முத்தியாங் கரனோ மென்னில்
கண்ணிலா னொளியைக் காணான் கதிரவ னிலனு மோதான். 19

(இதன்மேற்பட்ட பாடல்கள் இல்லை.)

## மாயாவாதம்

பிறந்த வங்கிசம் பரந்தான் பிறந்திடா தென்னிற் கேளாய்
பிறந்த வங்கிசம் பார்க்கிற் பேதமோ வபேத மோசொல்
பிறந்த வங்கிசம் பரத்திற் பேதமேற் பேதந் தட்டாம்
பிறந்த வங்கிசம் வேறன்றேற் பிறப்புறந் துயர மொக்கும். 4

பெத்தனாய்ப் பிறவா தாத்மா பேதமாய்த் ... ... ... 5

இலங்குமக் காந்த முன்பே யிரும்பது திரிந்தாப் போல
நலங்கொள் சேதனன்றன் முன்பே நடந்திடும் புத்தி யென்னில்
சலங்களின் பரமாத் மாவின் சோதிதன் கட்டுப் பாடோ
புலன்கொளா துடலை விட்டுப் போவது புத்தி சொல்லாய். 6

எண்ணியல் சுத்த நித்த னியான்பரம் பிரம மென்றுஞ்
சன்னதி மாத்தி ரத்தாற் சஞ்சாரி புத்தி யென்றுஞ்
சொன்ன வாரார் பரந்தான் சொல்லாத வவிகா ரத்தாற்
பின்னிய சடமாம் புத்தி பி(ம)ரம நரனென்றல் மெய்யோ. 7

பாடல் இல்லை-உரைமட்டும் உள்ளது. 8

நீக்கலாப் பரத்தின் கண்ணில் நிகழு மாயா கூட்ட
மாக்கையா யதன்கண் சீவ னாயுமுன் றிடுமென் னிற்கேள்
நோக்கிநீ பேத னோவின் றில்லையே பிறப்பை நொந்து
போக்குவார் தேட வேண்டாம் பொய்யாயே தேடுகின்றாய். 9

சற்பமென் றிரச்சு தன்னிற் சனித்தவப் பீருப் போல
நிற்பதிப் பிறவிப் பீரு நிருமிக்கு மளவு மென்னி
லற்பமோ வனித்த முண்டோ வறிவில்லை யோதான் பீரு
வுற்பவிப் பானென் சொல்லா யாங்குநற் பிரமன் றன்பால். 10

சலிக்குமச் சலனம் புந்தி சைதன னீரில் விந்துச்
சலிக்குமச் சலத்துக் குள்ளும் சந்திரன் சாயை யன்றோ
சலிக்குமப் புந்தி தன்னிற் சைதன னில்லை யத்தாற்
சலிக்குமச் சரீரம் புந்தி சடம் பின்னர்ச் சரீரி யாரோ. 11

இருளொடு வெளிக்கே தென்னுஞ் சம்மந்த முண்டோ [சொல்லின்
மருளுடை மாயை யோடும் வான்பர மங்ங னென்னில்
இருளொடு வெளிபோ லன்றி யானென தென்று நீயும்
மருளற மதிநூல் கற்கும் காரண மதித்தோ ராயே. 12

சூத்திர மொன்ற னேகந் துகளிலா மணிகோத் தாப்போ
லார்த்தபல் யாக்கைக் குள்ளு மாத்துமா வொருவ னென்னி
லப்பேத்தொ ரூன்றே டிப்போய்த்தோ பின்புநாய் தின்ன
[விட்டுப்
பாத்திருந் தாரோ சொல்லாய் பரத்தினர் செய்த தென்னே. 13

அகமுகம் பார்த்த கத்துள் அவிகார ஞானு னென்று
முகமுகம் பார்த்துச் சொன்னாய் முன்பின்பு மலைவோ ராதே
சகமுக மாயை யில்லாத் தற்பரம் பிரமம் வந்து
முகமுகம் பார்ப்ப ராஞல் பபரத்துக் குறை களையா. 14

இதம்பிர ... ... னபரம் பிரம மென்ரு
இதம்பிர பஞ்ச மித்தை யென்செய்யப் புகுந்தா யித்தி
லிதம்பிர பஞ்சத் துள்ளே யிருந்திருந் தல்லே னென்கை
யிதம்பிர பஞ்சற் கேற வீதல ... ... ... டோ. 15

... ... ... ... 16

உன்னுணர் வளவுஞ் செல்ல வுரைத்தனை யமையு நிற்க
மன்னிய வின்பத் துன்ப மலவுடல் சேரான் புத்தி
சன்னதி சேட்டை யன்ருந் தற்பர நீக்கும் போதை
துன்னிய பிறப்புக் கென்றுஞ் சுகதுக்கி யுளனென் ருேராய். 17

மாயாவாதம் முற்றும்

ஆகவிருத்தம் 114

## சாதிபேதம்

ஆதியிற் பிரம னேதா னனைவர்க்கும் பிதாவ தென்றும்
வேதியர் வேந்தர் மிக்க வணிகசூத் திரர்கள் மற்றும்
நீதியிற் சங்க ரங்கள் நீசராம் பறைய ரென்றும்
சாதிபே தங்கள் சொல்லும் தன்மையொன் றறிகி லோமே. 1

முகத்திலந் தணன்ருன் வாகு முடிமன் னூருத் தன்னில்
அகத்தினுல் வசியன் றன்பின் படியினிற் சூத்தி ரன்ருன்
பதத்திலென் பிதாபுத் திரரன்ருே பண்டையன் பால நீங்கள்
சகத்தினில் மூன்று போலப் பிறந்திடிற் சாதி யுண்டாம். 2

தந்தையாம் பிரமன் றன்பாற் சனித்தவத் தானந் தோறும்
அந்தண ராதி சாதி யன்றுபோற் பிறக்கக் காணேம்
முந்திய வுதிர வூத்தை யொழுக்கரு வாச லாலே
வந்தவர் பிறந்து சொல்லும் வாசியென் சாதி யையா. 3

ஓதிநல் லகத்தி யன்பின் ளுக்கவே வசிட்ட னுரும்
போதிநற் பிரம ருக்கும் புத்திரர் தாயார் வேசி
கோதினல் வசிட்ட ருைங் குணுங்கி பாலிமைழந்து பெற்ற
தீதில்நற் புதல்வன் சத்தி மாமுனி செப்பி லன்றே. 4

மன்னுநற் பராச ரற்கு மற்சன கந்தை பெற்ருள்
பன்னுமென் னூல்க ளெல்லாம் பண்ணிய வியாசன் றன்னேச்
சொன்னவவ் வியாச னற்குச் சூதனேப் பெற்றெ டுத்தாள்
அன்னமென் நடைதா னுன திலோத்தமை யவளு மன்றே. 5

வேசிபால் நுளேச்சி பாலும் குணுங்கிபால் விரவிற் றேன்றும்
பாசியாம் பல்வாய்ப் பார்ப்பார் பண்டித ரிருடி யாராய்
மாசிலா மறைநூல் கற்றங் கவரவர் வழிநீ சொன்னுய்
மாசிலாக் கல்வி யேகாண் மற்றுங்கள் பிறப்பை யோராய். 6

போற்றுவ ருயற்றி தன்னேப் பூதல மதனிற் பாப்பா
ரேற்றவர் தமக்கொன் றீயா ரியாவரிற் றலேவ ரையா
சாற்றிடிர் தன்ம போதரு தனவற்கே முற்றிதானு
மேற்றெரைகை கீழவது உம்மீடுவா ரகைமேலு மத்தால். 7

ஆத்துமாக் கரணம் பூத மைம்புலன் பொறிக ளொக்கும்
யோர்புடை யுணர்வு வேட்கை யுணவுமை துஞதி யொக்கு
மேற்படு மிறைவன் சாதி வேறுவே றில்லே யானற்
பாற்பிலா மறையோ ரெல்லாம் பறைகடை யென்ப தென்னே. 8

ஏறதற் கெருமை தன்பா லில்லேயாங் கெற்ப மென்றும்
வேறெனுஞ் சாதி பேதம் விளம்பிலப் படியே வேண்டும்
மாறிலா மறையோர் கெற்பம் வாய்ந்திடும் பறைச்சி பாலும்
கூறினுய் சாதி பேத மென்கொடு கூறினுயே. 9

ஆதலாற் சாதி யொன்றென் றறிந்து கொள் நித்த ரெல்லாம்
மோதிநல் லோர்க்கும் வேத முனேயன்றி யவற்கும் நிற்கும்
பேதமுண் டென்று சாதி பிதற்றிற் கற்பனேகாண் மிக்க
பாதஞானத்து ரைத்த பரமார்த்த மென்று கொண்ணீ. 10

சாதிபேதம் முற்றும்

**ஆகத் திருவிருத்தம் 124 கவியாற் பரபக்கம் முற்றும்**

# பாடல் முதற்குறிப்பு அகராதி

## சுபக்கம்

(எண் : பாடல் எண். *உடுக்குறியிட்ட பாடல்கள் தத்துவராயர் திரட்டிய சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் சேர்க்கப்பட்டிருப்பவையாகும்.)


அக்கணிற் றுந்தை 167
*அஞ்ஞானச் சித்தம் 317
அடங்கிடு மாயை தன்னி 155
*அடங்குதிக் கடைந்த போது 210
அடுத்திட வேண்டுவானே 185
அடைத்து வந்த 250
அடையமுக் குணத்திற் 140
அண்ட மெட்டடுத்து 254
*அண்டமெண் டிக்கெங் 324
அண்ணல்நீ யருளி 356
*அத்தத்துட் பிடித்து 197
அத்தமா யகத்துட் 87
அத்திற மதுவும் 216
அத்துவத் துணராதுள்ள 95
அத்துவா வறுவ கைத்தா 235
அத்துவா வென்கொல் 233
அதிகாரி சுத்த நித்த 80
*அந்தித்த பாச 352
அனுதியல் பாகிற் 73
அமைவி லின்பக் 1
*அரியனு யறிதற் கொண்ணு 52
அருந்துய ரம்மை யூழால் 100
*அலந்த மெய்ஞ்ஞான 23
அலந்துள வமரே சாதி 242
அலர்ந்த முக்குணத்தி 65
*அழுக்குடைச் சாதியோர் 329
*அளியாரு மநேக 326
*அற்பமா ஞான சத்தி 122
*அறிதரும் விபிரமூர்த்தி 302
*அறியலாம் புண்ணி யங்கள் 313
அறிவுடன் சாக்கி ரந்தா 175
அறிவுறு சாத்துவீக 186
*அன்றியொன் றில்லாம 9
அனுதியல் பாகிற் பெத்தம் 73
ஆசதா முடற்பிறப்பி 360
*ஆசி லாவ ருக்கர் 224
ஆத்தவிப் புத்திக் 141
*ஆதனுய்க் காணு 338
*ஆதாரஞ் சுவாதிட் டானம் 307
*ஆதியாஞ் சத்தி 16
ஆதியில் வாதை யாவு 277
*ஆர்த்தது பிறப்பை 203
*ஆர்த்தப் பிறவித் 215
ஆர்ந்தவிவ் வத்துவாக்க 237
*ஆனபி னெட்டா மாதம் 171
இடங்கொள் மந்திர 239
இடம்படு வியாப மேக 118
*இடுக்க ணுற்ற 223
இத்தனை நாளும் 341
இதுவென வறிதற் 63
இந்தவிச் சிவமாயுள்ள 26
இந்திர சாப மெங்ஙன் 37
இந்திரி யங்கள் சேட்டை 147
இந்துமுன் றரித்தோன் 43
இப்படிச் சிவாக மத்தி 267
இப்படிப் புத்தி தன்னி 85

*இப்படி யிருந்து நாளு 283
இப்படி யிருப்ப தொன்றென் 5
*இரண்டெனத் தத்துவத்தோ 136
*இரண்டென நடுக்கி 339
இருக்கிலுஞ் சிவமுத்த 354
இருட்டிய சகலர் தம்மில் 99
* இருடிகளிமையோர் 61
இருந்ததி லாத னங்க 272
இலங்குவான் வட்ட ரூப 150
*இலயமற் றிவையைக் 308
இறையெங்ங ளுகமத்தி 202
*இன்பமில் பிறப்பில் 219
*இன மனுப் பிராண 292
இனிப்பல சொல்லி 335
ஈரெட்டுக் கலையில் 40
உடற்கிறை மயக்க ஞான 102
*உணங்கிடா தனைத்து 361
*உயர்ந்துளே னுலகி 146
உரங்கொள் காலங்கி 240
உரத்தின்கண் பிறவித் 213
உரவிய பிராணு யாமமு 305
உரைப்ப டாவி காரத் 92
உளங்கொளுந் தேவ 301
*உற்றுமுன் னரசைச் 208
உற்றெறி கொளுநீ 172
உறப்பட்ட விலிங்க 180
உன்னிமுன் சிவமூலத்தை 36
உன்னுமம் மனோன்மணி 49
*ஊற்றமா முண்டி யின்றி 278
ஊறுமவ் வுந்திக் கண்ணின் 289
எங்கணும் நிறைந்த 333
எங்கெங்கே சந்துட் 323
*எஞ்ஞான மந்திரங்கள் 199
எடுத்தவவ் வுடல்க 60
*எண்டிசை போக்கு 191
எண்ணிலாச் சித்தர் 286
எண்ணிலாச் சிவன்தன் 67
எண்ணுமந் திரம்பத 249
எரியது சேர்வித் தாங்கே 120
எரியினைச் சேர்ந்த 179
*எல்லாந்தன் னுள்ள 8
*எல்லாருங் காண 357
எவ்விடத் தின்றும் 296
எறிந்திடும் பொருள்மே 106
என்வடி விதுவென் 182
என்றவிவ் வாயு வைந்து 166
என்றுமே யுயிர்களுக்கு 262
எனக்குநீ செய்வ 358
ஏகந்தா னறிதற் 126
ஏய்ந்தநல் லிருதயத்தே 303
ஏயும் வான்தனக் 152
ஏயுறு சுழுத்தி நாபி 178
ஏற்றுமாத் திரைத 291
ஐகண்டப் பட்டு 349
*ஒத்தவவ் வியத்தம் 53
ஒப்பில்விக் கேசர்க் 45
ஒப்பி லடியொன் 359
ஒப்பிலாச் சிவத்தின் 17
ஒப்பிலா மேரு 207
ஒருவன்செய் மாயை 162
ஒழிந்திடப் பொறிகள் . 177
*ஒன்றுடொன் றுவ்வா 58
ஓர்ப்பொடு பசியும் 91
கடிகொள்பூ நாசி 288
கலங்குவன் பிறவிப் 113
கலைகளீ ரெட்டில் 39
கன்மமு மனுதி 109
கன்றிடு மாகி னெஞ்சம் 261
கனந்தரு மாயை 128
கனவினில் விடயம் 229
காரியங் கன்மற் 34
*குகுத்தசங் கினியிரண்டுங் 276
குணங்களிற் றேன்றும் 144
*கும்பித்த சுவாலை 280
*குருபாதம் பூசி நாளும் 259
கேட்டிடங் கபான வாயுக் 293
கொடியவன் பிறப்ப 28
கொடுங்கொலை களவு 270
கொல்லா தான்றமைந் 265
கொல்லுதல் கொலைதா 264
கோதில் நற்சிவந் 355
கோதிலா மகேசர் 46
சட்டெனத் தெளிந்தான் 77
சடத்துவ மாயை 64
*சத்தமும் பரிசந் 160

| | | | |
|---|---|---|---|
| சத்தமுன் விடயந் தன்னைச் | 84 | *சுத்தமாந் தன்பின் | 284 |
| சத்தமுன் விடயம் பத்துஞ் | 176 | சுத்தமா மாயை | 125 |
| சத்தமெய்த் தயாவி | 218 | *சுந்தர வம்பிகத்தை | 279 |
| சத்திதன் னுருவ மாகிச் | 294 | *சுருக்கமில் சிவத்தின் | 55 |
| சத்திய முரைக்க | 260 | சுருக்கி வைத்த கலைகளைத் | 251 |
| சத்தியுஞ் சிவமுமே | 248 | *செஞ்சுடர்த் தீயுட் | 328 |
| சத்தியுந் தானுங் கூடி | 12 | *செடிபடு மாயா | 234 |
| சத்துநற் சிவவி | 119 | *செந்தியு மிருக்கக் | 344 |
| சத்துநற் புமான் | 132 | செப்பின தத்துவங்கள் | 117 |
| சத்தெனு மமிர்தா னத்தை | 82 | செப்பொண்ணு தென்னு | 336 |
| சந்ததஞ் சிவம்பா | 21 | செறிதரு கதிரோன் | 83 |
| சந்திர னிருதயந்தான் | 32 | செறிதரும் பிதிட்டை | 241 |
| *சலத்தின்மிக் கெழுந்து | 225 | செறிவுறு மலமுங் | 98 |
| சலந்திகழ் மாயா | 227 | *சேர்ந்தவல் வுருவம் | 93 |
| *சற்குரு பரசிவன்ரு | 256 | சேர்ந்த விந்திரியங் | 309 |
| சனித்திடாக் கோசரத்திற் | 312 | சொல்லிய தீச்சை | 230 |
| சார்ந்தநற் கன்ம மாய | 41 | *சொல்லுஞ் சாத்திர | 315 |
| *சார்ந்ததவ் வளவிற் | 173 | சொற்படு சாக்கிராதி | 184 |
| சார்ந்தனன் விந்து | 123 | சொன்னமும் மலங்கள் | 105 |
| சாற்றிடி லாதி சத்தி | 22 | சொன்னவில் வாயு | 300 |
| *சாற்றிடிற் பசுவ நாதி | 68 | சோத்திர மோசை | 148 |
| சாற்றிய பற்ப மாறும் | 273 | ஞானமில் குருவை | 205 |
| சிட்டநல் லறிவு | 138 | தஞ்சமாம் பிராண னுகத் | 287 |
| சிட்டரா மன்பர் | 103 | தட்டி விட்ட பொன்கலுத் | 222 |
| சிட்டனல் வேத கத்தாற் | 268 | தத்துவஞ் சிவமுஞ் | 115 |
| சித்தநல் லாத்து மாவுங் | 96 | தத்துவ பேதஞ் சொன்னேம் | 48 |
| சித்தமில் துரியந் தன்னில் | 181 | *தத்துவஞ் சகலோற் | 15 |
| *சித்தநீ யுனக்கு நாளுஞ் | 257 | தத்துவ மனைத்துஞ் சார்ந்து | 114 |
| சித்திரித் துலகம் | 124 | *தத்துவ மனைத்துஞ் சாரான் | 7 |
| *சித்துட னசித்து மாய | 57 | தத்துவ மூர்த்தி | 20 |
| சிந்தனை யாவும் விட்டுக் | 320 | தத்துவ வித்திலாத | 217 |
| சிந்தித்து வணங்கு | 18 | தந்தைதன் வலத்தே | 164 |
| *சிற்சத்தி தானே | 56 | தம்மைத்தா னுக்க | 263 |
| *சிற்சொரு பத்து | 330 | தன்மங்கொ டாயு | 220 |
| சிறந்தநற் சைத னன்ருன் | 142 | தன்னைத்தான் காணுக் | 183 |
| சிறந்தநற் றீட்சை | 200 | தன்னைத்தான் காணி | 319 |
| *சின்மய மாதலாலே | 71 | தாங்குபூ தாதிக்கப்பேர் | 143 |
| *சினத்திருங் கடலெழுந்து | 196 | *தாயையா ரறியார் | 158 |
| சினத்தொடு பொறிகள் | 306 | *தானல்லா தொன்று | 89 |
| சுத்தநல் லாத்மா | 231 | திகடரு ஞானந் | 228 |
| சுத்தநற் சிவம தென்றுஞ் | 19 | திரிவிதத் தத்துவங்கள் | 3 |
| சுத்தநற் சிவமுஞ் சிவன் | 76 | திருத்தமாஞ் சதாசிவாதி | 27 |
| சுத்தநற் சிவமு மத்திற் | 114 | *திருத்திமா மலர்போய்த் | 159 |

*திருத்தமா முத்தி 194
துரியத்தைச் சாக்கிரத்தே 195
துலங்குமவ் வுயிர்களுக்குத் 137
*துற்றிடுங் கபாலந் தன்னிற் 275
துன்ப மிக்கே யெங்கணுஞ் 221
துன்பொடு பயமில் லச்சை 94
துன்றிடுஞ் சமான வாயுந் 295
தூண்டிய வறிவினோடுந் 131
தெரிந்தவல் விடைய 133
*தேசிக ரனந்த மந்தச் 314
தேர்ந்தனன் பரம மாய 157
*தோயு முன்னுடலை 163
தோற்றமு மாதியாய 10
தோன்றிடும் வாயுத் தந்தை 165
நட்பொரு பகைக ளுள்ளா 101
நற்ற வங்கள் முத்தி 226
நன்மேந் திரியஞ் 116
*நாடிக ளனைத்தி னுக்கு 274
நாதனற் சிவாக 2
நாவினு நுகர்ந்து 298
*நித்தம்போ லநித்த 59
நித்தன் கேவல 74
*நிராமயன் னிர்க்குணத்தன் 6
*நின்றவவ் விடந்தன் 232
*நினைத்திடுஞ் சிவத்தை 266
நீடுமா லிருளுக் கென்று 174
*நீருறு குமிழி போல 169
நேர்ந்திடுங் கிழக்கு 35
*பகைத் தென்னை 345
பங்கயா தனமா மேனி 30
*பசுபதி சைதனத்தாற் 75
பஞ்சநன் முகத்தீசர் 31
பஞ்சமந் திரமே 29
பட்டிடுங் கொலைவேல் 33
படர்ந்துள மாயை 129
பண்டுநீ நானெனன் 337
பதிபதார்த் தங்க ளாய 66
பந்தநற் பிராணன் 290
*பரஞ்சித்தி லுதியா 54
பரிந்துமுன் தவங்கள் 271
பலவகைச் சகத்தை 42
பழித்துரை நியமத் 139
பற்றி நின்ற பரகுருக்கள் 253
*பற்றிமுன் பெழுந்த 211
பற்றிமுன் மறைத்த 353
பற்றின பிறவித் துன்பப் 214
பற்றின மலத்த ரென்று 97
*பற்றினை வினைகள் 193
*பன்னுளும் பண்ணிப் 316
பன்னிடப் பட்ட 347
பன்னிரா தித்தர் 47
பன்னுமெந் நூல்க 14
*பாத்திர மனைத்திற் 331
பாவக மெய்யோ 38
*பிணிகளும் பாசத் தாலே 112
பிராணனால் 285
*பிரிந்திடக் கடைந்த 209
பிறப்பதும் பாசத் தாலே 111
*பிறப்பதே பேணி 62
பின்கலை பிறந்த தென்னும் 130
பீடலிங் கத்துத் தானும் 24
புகழின் மிக்க வசமொடு 245
புறக்கண்மேல் 321
பெண்ணலி யாணு 343
*பெண்ணலி யாணென் 11
பெத்தபா வகத்தை 334
பெத்தித்த சாம நீலம் 79
பெற்றநற் றந்தை 325
*பொறிகள் போய்ப் 13
பொறிகளால் விடய 88
பொறிபுலன் கரணம் 342
*பொன்னைத்தான் கண்ட 318
*போதமும் போதா 187
போற்றுகை தவிர்த்தல் 258
மத்தமவ் வியத்தந் 135
மத்தமவ் வியத்திற் 190
மந்திரங்க ளத்திரே 247
மயக்கமோ டறிவொன் 108
மற்றொரு சிந்தை யின்றி 322
மன்ன னின்னருளால் 350
*மன்னிடு மலங்கள் 156
மன்னு தத்து வங்கள் 246
*மன்னுநற் சிவத்திற் 51
*மன்னுநற் சிவம தேகம் 4
மன்னுநன் மருந்தி 327
*மாதமைந் துக்கு ளெல்லா 170

மாலதா மாயை யென்று 110
*மாருமந் திரமைந் தாரும் 236
மிக்குடல் வியாபி யாய 299
முகமங்கள் காணு நிற்கு 86
*முத்தனு முத்தாத் மாவும் 70
முத்திதன் சித்தி தன்னை 192
முந்தித்தான் சிவதத்து வத்தில்121
முப்பொறிப் பகைக 348
*முற்றின துரித்துக் 212
மூடிமுன் னிருந்த 78
*மூண்டெழு சுவாலை 282
மூர்த்தி முன்னுதி 297
மூர்த்தினி தன்னில் 304
மூலத்தி னின்றுங் கால 127
வசித்திடும் வாக்குத் 149
*வஞ்சகம் பண்ணி 340
வடித்துள கிளியே 198
வந்தியோடு பூசை 255
வருத்தமா மியம 269
வருந்துறும் புருட னுகி 244
*வருந்திய சரிதை 332
*வன்னிமண் டலமும் 281
வாதியாய் மயக்கு 252
*வார்ந்த மூவகை 311
வாலிய சிவந்து 50
வானினிற் சதாசி வன்றன் 153
*விட்டவவ் வுடலாற் 168
*விட்டிடுந் தேகஞ் 161
*விட்டுவிட் டொன்றே 206
*விடத்தினுல் மூர்ச்சித் 204
விடமதுக் கடங்கிப் போதம் 188
விடையமே புறக்க ணேடி 310
*விண்ணினில் மழைக்குற் பத்தி69
வித்தகத்த கோரமுஞ் 243
வித்தகப் புமான்முன் 145
*வித்திலே விளைவு 90
*வித்தின்றி முளைதா னில்லை 72
விந்துமத் திமத்த தாகும் 25
விந்து வினின்று மலம் 154
விரிதரு கதிரோன் 189
விரியும் வான்றூமம் 151
*விரையுமா பூதம் 346
விளங்கிய சித்தத் தோதான் 81
விளம்பிய வத்து வாக்கள் 238
விளைத்தறி வாத்து மாவின் 104
வெங்கரி யுரித்தோன் 44
வெய்யசொல் வெறுப்புச் 107
வேதித்த போதே 351
வேதிய ராதி நான்காம் 201

# பரபக்கம்

(எண் : பக்க எண்)


அகமுகம் பார்த்த கத்துள் 49
*அன்னத்தி லிருநீர் 45
ஆத்துமாக் கரணம் 50
*ஆதலா லன்னந் 46
ஆதலாற் சாதியொன்று 50
ஆதியிற் பிரம னேதான் 49
ஆர்ந்தவக் காலஞ் 47
இதம்பிரமம் 49
*இருளொடு வெளிக்கே 48
*இலங்குமக் காந்த 48
*இறந்தபின் பிறவா 47
இறந்தன பிறவா 46
இன்றுதாய் மலடியென்று 46
*உடம்பினி லுணர்வா 46
உடல்குரு நீர் 46
உலோகர்தம் வார்த்தை 46
உன்னுணர் வளவுஞ் 49
எண்ணியல் சுத்த 48
ஏறதற் கெருமை தன்பா 50
*ஓங்கிணை மரத்தின் 46
ஓதிநல் லகத்தி யன்பின் 50
காயிலை நீறு கூட்டி 46
*கோலமாங் கலைகள் 46
சடங்களா மாபூத 47
*சலிக்குமச் சலனம் 48
*சற்பமென் றிரச்சு 48
சூத்திர மொன்றநேகந் 49
செய்யுள் சிதைவு, உரைஉண்டு 48
*சைதன வீசனாத்மா 45
*தந்தையாம் பிரமன் 49
நீக்கலாப் பாத்தின் 48
பிறக்குமிவ் விடத்துத் 45
பிறந்த வங்கிசம் 48
பெத்தனாய்ப் பிறவா 48
போற்றுவ ருயற்றி 50
போனமுன் னுடலிற் 47
மக்கள்மார் மணலூண் 45
மன்னுநற் பராசரற்கு 50
முகத்திலந் தணன்றான் 49
வானங் காலங்கி 45
விண்ணில்லார் 47
*வினைபய னில்லை யாகில் 47
வேசிபால் நுளைச்சி 50
வேலமுட் கூச்சிட் டாரும் 47